ஸ்ரீ ராமகி

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

பங்குனி
மார்ச்—1978



ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர் :: சென்னை-600 004

விலை 70 காசு

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

தொகுதி—58 | மார்ச் 1978 | இதழ்—3

பொருளடக்கம்

சந்தா எண் 4001 முதல் 4225 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை மார்ச் மாதத்துடன் முடிவடைகிறது. அன்பர்கள் சந்தாவை உடனடியாகச் செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை 600004

1978 மார்ச் மாத நிகழ்ச்சிகள்

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜயந்தி விழா நிகழ்ச்சிகள்

5-3-78 ஞாயிறு: மாலை 4 முதல் 6-30 வரை	**'ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள்'** என்னும் தலைப்பில் திரு வி.எஸ். வேங்கடரமணராவ் அவர்கள் ஹரிகதா காலட்சேபம் நிகழ்த்துவார்கள்.
6-3-78 திங்கள்: மாலை 5-45 முதல் 7 வரை	சொற்பொழிவு பொருள்: **'ஸ்ரீ ஆதிசங்கரரின் அத்யாஸபாஷ்யம்'** பேசுவோர்: 1. டாக்டர் டி.எம்.பி. மகாதேவன் (ஆங்கிலம்) 2. திரு வி.ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள் (தமிழ்)
8-3-78 புதன்: மாலை 5-45 முதல் 7 வரை	சொற்பொழிவு பொருள்: **அத்வைத நோக்கில் பிரம்மசூத்திரம்** பேசுவோர்: 1. டாக்டர் பி.கே. சுந்தரம் (ஆங்கிலம்) 2. திரு வி.ஆர். கல்யாணசுந்தர சாஸ்திரிகள் (தமிழ்)
9-3-78 வியாழன்: மாலை 5-45 முதல் 7 வரை	சொற்பொழிவு பொருள்: **விசிஷ்டாத்வைத நோக்கில் பிரம்மசூத்திரம்** பேசுவோர்: 1. டாக்டர் ஆர். பாலசுப்ரமணியன் (ஆங்கிலம்) 2. பேராசிரியர் T. E. சம்பத்குமார் (தமிழ்)
10-3-78 வெள்ளி:	**ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜன்ம திதி:** விசேஷ பூஜை, பஜனை, ஹோமம் முதலியன. (காலை 5 மணி முதல் 11-30 வரை)
மாலை 6-30 மணிக்கு	ஆரதி & பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்வும் வாக்கும் பற்றிய சொற்பொழிவுகள்.
11-3-78 சனிக்கிழமை: மாலை 5-45 முதல் 7 வரை	சொற்பொழிவு பொருள்: **துவைத நோக்கில் பிரம்மசூத்திரம்** பேசுவோர்: 1. டாக்டர் பி. நாகராஜராவ் (ஆங்கிலம்) 2. டாக்டர் என். வீழிநாதன் (தமிழ்)
12-3-78 ஞாயிறு: மாலை 5-30 முதல் 7-30 வரை	**ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜயந்திவிழா பொதுக்கூட்டம்** பொருள்: **ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்வும் வாக்கும்** தலைவர்: சுவாமி தபஸ்யானந்தர் பேசுவோர்: 1. உயர்நீதிமன்ற நீதிபதி மு. இஸ்மாயில் 2. சிலம்புச்செல்வர் ம.பொ. சிவஞானம்

ஸ்ரீசைதன்ய ஜயந்தி:

26-3-78 ஞாயிறு: மாலை 5-30 முதல் 7-30 வரை	பொதுக்கூட்டம் பொருள்: **ஸ்ரீகிருஷ்ண சைதன்யரின் வாழ்வும் உபதேசங்களும்** தலைவர்: சுவாமி தபஸ்யானந்தர் பேசுபவர்: திரு D. இராதாகிருஷ்ணன்
சத் சங்கம்: 19-3-78 ஞாயிறு:	மாலை 4 மணி முதல் 8 மணி வரை
மாலை 4 முதல் 4-20 வரை	ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம்
மாலை 4-30 முதல் 5-30 வரை	சொற்பொழிவுகள் 1. **ஸ்ரீமத் பாகவதம்**—திரு 'அண்ணு' சுப்ரமண்யம் (தமிழ்)
மாலை 5-35 முதல் 6-30 வரை	2. **ஸ்ரீமத் பகவத்கீதை**—சுவாமி கபீரானந்தர் (ஆங்கிலம்)

வார நாட்களில் நடைபெறும் உரை நிகழ்ச்சிகள்—(மாலை 5-45)
வழக்கம் போல ஒவ்வொரு நாளும் நடைபெறும்

சிறப்புச் சொற்பொழிவுகள்: சனிக்கிழமைகளில் மாலை 5-45 மணிக்கு	1. ஸ்ரீமத் பாகவதம்—திரு பி. இராமகிருஷ்ணன் (4-3-78) 2. நாராயணீயம்—திரு ஆர். கோதண்டராமன் (18-3-78) 3. ஈசாவாஸ்ய உபநிஷதம்—சுவாமி கீர்த்திதானந்தர் (25-3-78)

விசேஷ தினங்கள்:

7-3-78 செவ்வாய்:	மகாசிவராத்திரி—இரவு முழுவதும் பூஜை, பஜனை நடைபெறும்.
19-3-78 ஞாயிறு:	அந்தர் யோகம் (சாதனை தினம்)
28-3-78 செவ்வாய்:	சுவாமி யோகானந்தர் ஜயந்தி

5-3-78 & 20-3-78 ஆகிய ஏகாதசி தினங்களில் மாலை வழிபாட்டிற்குப் பிறகு **ஸ்ரீராம நாம சங்கீர்த்தனம்** நடைபெறும்.

அனைவரையும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தலைவர்,

தொலைபேசி: 71231

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை-600 004

RAMAKRISHNA MATH

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை

— திருமூலர்

தொகுதி 58 | பிங்கள ஹு பங்குனி மீ | இதழ் 3

பிரார்த்தனை

त्वं स्त्री त्वं पुमानसि त्वं कुमार उत वा कुमारी ।
त्वं जीर्णो दण्डेन वञ्चसि त्वं जातो भवसि विश्वतोमुखः ॥

—श्वेताश्वतरोपनिषत्

த்வம் ஸ்த்ரீ த்வம் புமாநஸி த்வம் குமார உத வா குமாரீ |
த்வம் ஜீர்ணோ தண்டேந வஞ்சஸி த்வம் ஜாதோ பவஸி விச்வதோமுக: ||

— சுவேதாசுவதர உபநிஷத், 4-3.

பெண்ணும் நீ, ஆணும் நீ; சிறுவன் நீ, சிறுமியும் நீ; கிழத்தனம் கொண்டு கைக்கோல் ஏந்தித் தள்ளாடுகிறாய் நீ; பிறப்புற்று எங்கும் நோக்கியபடி நிற்கிறாய் நீ.

பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே!

— சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருள் வாக்கு

அடக்குதற்கரிய இந்திரியங்கள் யாவும் பக்தி மார்க்கத்தால் சுலபமாய் அடங்கிவிடும். உனது உள்ளத்தில் பக்தி பெருகும்போது உலக இன்பங்கள் துச்சமாகத் தோன்றும்.

ஆண்டவனின் புனித நாமத்தைச் சதா சர்வகாலமும் உச்சரித்து வா. இவ்விதம் செய்தால் காமம் கோபம் முதலிய எல்லாப் பாவங்களும் அகன்றுவிடும். உடல் சம்பந்தமான எல்லா இன்பங்களும் உன்னிடமிருந்து விலகிவிடும்.

ராமா, கிருஷ்ணு, சிவா, துர்க்கா ஆகிய நாமங்களில் எதையாவது சதா உச்சரித்து வா. நாளுக்கு நாள் கடவுளுடைய திருநாமத்தை உச்சரிப்பதில் நீ ஆனந்தம் கொள்வாயானுல் உனது மாயை நீங்கிவிடும். அவனது அருள் நிச்சயமாக உன்னை வந்தடையும். அதன்பிறகு நீ மனிதப் பிறவியை எடுத்ததன் பயனைப் பெற்றவன் ஆவாய்.

என்ன, பகவானின் திருநாமம் சாமானியமானது என்று நினைக்கிருய்? பகவானுக்கும் அவருடைய திருநாமத்துக்கும் வித்தியாசமே கிடையாது. சத்தியபாமை பொன்னையும் ஆபரணங்களையும் வைத்து ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய எடைக்கு ஈடுகட்ட முயன்று தோல்வியுற்ருள். ஆனுல் ருக்மிணியோ ஸ்ரீகிருஷ்ணனுடைய நாமத்தை ஒரு துளசிதளத்தில் எழுதித் தராசின் மற்றத் தட்டில் வைத்தாள். என்ன ஆச்சரியம்! அது கிருஷ்ணனுடைய எடைக்குச் சமானமாக நின்றது.

பக்தியுடன் பகவந்நாமத்தைப் பாடு. அப்போது மலைபோலக் குவிந்திருக்கும் உனது பாவங்களெல்லாம், ஒரு நெருப்புப்பொறியால் மலைபோலக் குவிந்த பஞ்சுப்பொதிகள் எரிந்து சாம்பலாவதைப் போல அழிந்து போய்விடும்.

ஆண்டவனின் திருநாமத்தைச் சதா சர்வகாலமும் உச்சரிப்பதோடு, ''பக்தி வேண்டும்; குன்ருத அன்பு வேண்டும்; அநித்தியப் பொருள்களான பொன், புகழ், போகம் இவைகளிலுள்ள பற்றுதல் அகல வேண்டும்'' என்று மனம் உருகிப் பகவானைப் பிரார்த்தனை செய்வீராக.

தூணைப் பிடித்துக்கொண்டிருக்கும் பையன், தவறிக் கீழே விழுந்துவிடுவோம் என்ற பயம் கொஞ்சமும் இல்லாமல் மிகுந்த வேகத்துடன் அதைச் சுற்றிச் சுற்றி வருகிருன். அது போலவே, பகவானிடம் மனதை உறுதியாக நிலைநிறுத்திவிட்டு, நீ உனது உலகக் காரியங்களைச் செய். அவ்விதம் செய்தால் உனக்கு ஆபத்துக்களே நேராது.

உலகம், ஈசுவரன் இந்த இரண்டையும் ஒன்றுபடுத்தி எப்படி வாழ்வது? அதோ, தச்சனின் மனைவியைப் பார். அவள் எத்தனை காரியங்களில் கருத்துச் செலுத்துகிருள்! உரலில் இருக்கும் அவலை ஒரு கையால் கிளறிவிட்டுக்கொண்டே, மற்றொரு கையால் குழந்தையை அணைத்துப் பால் கொடுத்துக்கொண்டே இருக்கிருள். அதே சமயத்தில் அவல் வாங்க வந்த ஒருவனுடன் பேரம் பேசிக்கொண்டும் இருக்கிருள். இதைப் போல அவள் பல வேலைகளை ஒரே சமயத்தில் கவனித்தாலும், அவளுடைய மனம் மட்டும் உலக்கையானது தன்னுடைய கையின் மேலே விழுந்து காயம் உண்டாக்காமலிருக்க வேண்டும் என்ற ஒரு விஷயத்திலேயே நிலைத்திருக்கிறது. அவளுடைய செய்கைகளைப் போல நீயும் உலக வாழ்க்கையில் இரு. ஆனுல் பகவானை மட்டும் எப்போதும் நினைத்துக்கொண்டிரு. ஒருபோதும் கடவுள் மார்க்கத்தை விட்டுப் புறம்பாகப் போகாதே.

***

ஓம்

விஜய தீபம்

நாம ஜபம்

தெய்விகமே வடிவெடுத்தவராகவும் அஞ்ஞானத்திலிருந்து முற்றிலும் விடுபட்டவராகவும் குரு விளங்குகிறார். அத்தகைய குருவினிடமிருந்து சீடன் தனது இஷ்ட தெய்வத்தைக் குறித்து ஜபிக்க வேண்டிய மந்திரத்தைப் பெறுகிறான். மந்திரோபதேசத்தின்போது பெறும் இந்த மந்திரம் சீடனுக்கு மிகவும் புனிதமானது.

குருவினால் அருள்கூர்ந்து வழங்கப்படும் மந்திரத்தைச் சீடன் தனக்குச் சொந்தமாகவும், உலகில் தனக்குள்ள ஒரே சொத்தாகவும் ஆன்மிகச் சாதனங்களைத் தவறாமல் பழகி வருவதன் மூலம் செய்துகொள்ள வேண்டும்.

சாதகன் தன்னுடைய குருவினிடம் மட்டுமே மந்திரத்தைப் பற்றிப் பேசலாம். வேறு யாரிடமும் அதைப்பற்றிப் பேசுவது கூடாது. மந்திரத்தை இரகசியமாகச் சீடன் தன்னுடைய உள்ளத்தில் வைத்திருக்க வேண்டும் என்பதற்குக் காரணம், அது சீடனின் உணர்வில் மிகமிக ஆழமாகப் பதிந்து கடவுளை அனுபூதியில் உணரச் செய்ய வேண்டும் என்பதுதான். மந்திரத்தை உள்ளத்தில் மிகவும் ஆழமாகப் பதியச்செய்யும் சாதகன், உலகில் வாழும் போதே ஜீவன்முக்தனாக ஆகமுடியும்.

மந்திரத்தை இயன்ற போதெல்லாம் அடிக்கடியும் ஜபிப்பது அவசியம். 'அவ்விதம் செய்து வருவதே நல்ல ஒரு சத்சங்கமாகும்.

கடவுளுக்காக வாழ நினைப்பவர்கள் ஜபம் செய்வதைத் தங்கள் இயல்பாகவே அமைத்துக் கொள்ள வேண்டுவது முற்றிலும் அவசியம்.

பக்தன் எந்த இஷ்டதெய்வத்திடம் மனம் தோய்ந்து பக்தி செலுத்துகிறானோ, அந்த இஷ்ட தெய்வத்தின் குணநலன்களைத் தானும் பெறுகிறான். பகவானின் நாமத்தை மனம் தோய்ந்து திரும்பத் திரும்ப ஓதுவதால், நமது மனதுக்குள் புனித நினைவுகளும் பகவானின் மங்கள குணங்களும் புகுந்து இடம்பெறும். நமது மனதிலுள்ள எல்லாவிதமான களங்கங்களையும் போக்கக் கூடியது நாமஜபம்.

சீடன் தனது இதயக்கோவிலில் பகவானின் தரிசனத்தைப் பெறும் வரையிலும், ஓயாமல் ஒழியாமல் தொடர்ந்து பொறுமையாகவும் மன உறுதியோடும் மிகவும் கடுமையாக ஆத்ம சாதனங்களைப் பழக வேண்டும்.

மந்திரத்தின் சக்தி மிகவும் பெரிது. ஒரு சிறிய விதைக்குள் மிகப் பெரிய ஒரு மரம் முழுவதும் அடங்கியிருக்கிறது; தக்க பருவத்தில் அந்த விதை மலர்களையும் கனிகளையும் தரக் கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கிறது.

அதுபோலவே மந்திரத்துக்குள்ளே அளவில்லாத ஆன்மிக முன்னேற்றத்தைத் தரும் தெய்விகச் சக்தியும், துன்பமும் மரணமும் குறைபாடுகளும் நிறைந்த உலகத்திலிருந்து சாதகனை இஷ்டதெய்வத்துடன் முடிவில் ஒன்றுபடச் செய்யும் வலிமையும் அடங்கியுள்ளன.

நெருப்பினுடைய அடிப்படையான இயல்பு சுடும் தன்மை. தண்ணீரினுடைய அடிப்படையான இயல்பு குளுமை. இவைகளைப் போலவே மனிதனுடைய அடிப்படையான இயல்பு தெய்விகம் ஆகும். இந்தத் தெய்விக இயல்பு இலௌகிகப் பற்றில் தோய்ந்துள்ள மனிதனிடம் மறைந்த நிலையில் இருந்துகொண்டிருக்கிறது.

சாதகன் நாமஜபம் பழகுவது போன்ற ஆன்மிகச் சாதனங்களால், தன்னிடம் உறங்குவது போல மறைந்திருக்கும் ஆன்மிகச் சக்தியை மலரச் செய்கிறான். அவ்விதம் சாதகனிடம் ஆன்மிகச் சக்தி மலரும்போது, மந்திரம் ஜோதி மயமான எழுத்துக்களாகத் தரிசனம் தருகிறது என்றும், மனிதனது குரலைப் போலவே தெளிவாகக் கேட்கப்படும் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவைகள் எல்லாம் தகுதி வாய்ந்த முதல்தரமான சாதகர்களின் அனுபவ உண்மைகளே ஆகும். இத்தகைய நுட்பமான உண்மைகளை, அறிவைக் கொண்டு ஆராய்வதாலோ, வெறும் விவாதங்களில் ஈடுபடுவதாலோ தெரிந்துகொள்ள முடியாது.

சுவாமி சாரதானந்தரின் கருத்தைத் தழுவி இந்த இதழின் விஜயதீபம் இடம் பெறுகிறது.

இடைவிடாமல் தொடர்ந்து மனம் தோய்ந்து ஆன்மிகச் சாதனங்களை முழுமூச்சுடன் பல ஆண்டுக் காலம் தவறாமல் பழகி வருவது அவசியம். காலக்கிரமத்தில் சாதகனின் உள்ளத்திலேயே எல்லா ஆன்மிக உண்மைகளும் சுய அனுபவமாக வெளிப்படும். அந்த நிலையில் மந்திரமும், தான் வழிபடும் இஷ்டதெய்வமும் ஒன்றே என்பதை அனுபவபூர்வமாகச் சாதகன் தெளிவாகவே உணர்கிறான்; மந்திரம் நாமரூபம் (பெயரும் வடிவமும்) இல்லாத பரம்பொருளின் பிரத்தியட்ச வடிவமாகத் தோன்றும். அந்த மந்திரத்தின் மூலமாகவும் மந்திரத்திலும் சாதகன் இறைவனைத் தரிசிப்பான்.

நாமமும் நாமியும் (திருநாமமும் அதனுடன் தொடர்புகொண்ட இஷ்டதெய்வமும்) ஒன்றே என்னும் உண்மையைப் பரிபக்குவ நிலையில் சாதகன் தானே உணர்கிறான்.

இறைவனைப் பற்றிய நினைவுகளால் நமது மனம் நிரப்பப்படும் அளவுக்கேற்ப, மற்ற இலௌகிக நினைவுகள் குறைந்துகொண்டே வரும். இந்த உண்மையைச் சாதகன் தன்னுடைய சொந்த அனுபவத்திலேயே பார்க்கச் லாம். மேற்குத் திசையை நோக்கிச் செல்லச் செல்லக் கிழக்குத் திசையிலிருந்து நாம் விலகிச் செல்கிறோம். அந்த நிலையில் கிழக்குத் திசையிலிருந்து விலகிச் செல்வதற்கு என்று தனியாக நாம் முயற்சி எதையும் செய்ய வேண்டியதில்லை. அதுபோலவே ஆண்டவனின் நினைவு நமது உள்ளத்தில் ஆழ்ந்து பதியப் பதிய, இலௌகிக நினைவுகளும் நமது உள்ளத்தை விட்டு விலகி விடும். இலௌகிக நினைவுகளைத் தவிர்ப்பதற்கு என்று தனியாக நாம் முயற்சி எதையும் செய்ய வேண்டியதில்லை.

மனதை ஆண்டவனிடம் ஒருமுகப்படுத்த வேண்டும் என்பதுதான் முக்கியமான விஷயம். ஒரு பொருளை விட்டு வேறொன்றுக்குத் தாவுவது என்பது மனதின் இயல்பான குணமாகவே இருந்துகொண்டிருக்கிறது. அது நிலையாக ஓர் இடத்தில் இருப்பதில்லை. தூங்கும்போதும்கூட அது அலைந்து திரிந்து, கண்டபடி எல்லாம் கற்பனைகளில் ஈடுபட்டுக் கனவுகளைத் தோற்றுவிக்கிறது.

விதவிதமான பல வகையான நினைவுகள் ஆரம்ப நிலையிலுள்ள சாதகனின் மனதைச் சிதறச் செய்வதாக இருக்கும். என்றாலும் சாதகன் அதைரியத்துக்கு இடம் கொடுத்துவிடக் கூடாது; ஆன்மிகச் சாதனைகளைப் பழகி வரும் போரைத் தொடர்ந்து நடத்தி வரத்தான் வேண்டும். நாள்தோறும் உணவுக்காக வீட்டில் சமைப்பது போலவும், தொடர்ந்து மூச்சு விடுவது என்னும் செயல் நடைபெறுவது போலவும், ஆன்மிகச் சாதனைகளையும் அன்றாட வாழ்க்கையில் அவசியம் இடம்பெறச் செய்ய வேண்டும். ஒரு நாள் மட்டும் சமைத்துவிட்டுப் பிறகு அதைத் தொடராமல் இருக்க முடியாது அல்லவா? தொடர்ந்து மூச்சு விடாமல் உயிர்வாழ முடியாது அல்லவா? அவைகளைப் போலவே, ஆன்மிகச் சாதனைகளைப் பழகுவதையும் குறிப்பிட்ட ஒரு சிறிது காலம் பழகிவிட்டு நிறுத்திவிடக் கூடாது; தொடர்ந்து ஊக்கத்துடன் ஓயாமல் ஒழியாமல் நாள்தோறும் பழகுவதை அன்றாட வாழ்க்கையில் தலையாய தர்மமாகவே கொள்ள வேண்டும்.

மனதை அடக்குவது கடினமாகவும் துன்பம் தருவதாகவும்தான் இருக்கிறது. ஆனாலும் மனதோடு தொடர்ந்து போராடி, நாமஜபத்தில் அதை ஈடுபடச் செய்யும் போராட்டத்தை இடைவிடாமல் சாதகன் தொடர்ந்து நடத்தி வர வேண்டும். குறிப்பிட்ட நல்ல ஒரு பரிபக்குவத்தை மனம் அடையும் வரையிலும் இதைச் செய்யவே வேண்டும்.

குறிப்பிட்ட பக்குவ நிலையை மனம் அடையும் வரையிலும் இலட்சியத்திலிருந்து அடிக்கடியும் தவறுவது இயல்பு. பரபரப்பும் வெற்று ஆரவாரங்களும் நிறைந்த உலகின் படைப்புக்களாகவே நாம் இப்போது வாழ்ந்து வருகிறோம். இந்தச் சூழ்நிலையில் நாம் எப்போதும் விவேகம் கொண்டவர்களாக நாமஜபம் பழக முடியாதவர்களாகத்தான் வாழ்ந்து வருகிறோம். என்றாலும் முயற்சியில் தளர்ந்து போகாமல் ஜபம் பழக வேண்டும். இதைத் தவிர வேறு வழியில்லை.

உலக விஷயங்களில் அறியாமையால் மனதைப் பழக்கப்படுத்தி விட்டோம். நாமே போட்ட அந்த இலௌகிக முடிச்சுக்களை நாமே தான் நாமஜபத்தை உறுதியாகக் கைக்கொள்வதன் மூலம் அவிழ்க்க வேண்டும்.

பகல் நேரத்தில் நமது விழிப்பு நிலையில் ஆண்டவனைப் பற்றிய நினைவுகள் தொடர்ந்து ஒரு சிறிதளவாகிலும் நமது உள்ளத்தில் ஓடியபடியே இருக்க வேண்டும். பலவிதக் கடமைகளுக்கு இடையிலும் அவ்வப்போது நாமஜபம் பழகவே வேண்டும். உள்ளத்தில் அருள்தாகமும் நாமஜபமுமாகிய தீபம் சதாசர்வ காலமும் எரிந்துகொண்டே இருக்கிறதா என்று இடையிடையே நம்மை நாமே சோதித்துக் கொள்ள வேண்டும்.

இவ்விதம் கடவுள் நினைவை உள்ளத்தில் இருத்தி வருவதால், தியானம் செய்யும் போதும் தூங்கும்போதும்கூட தகாத எண்ணங்கள் மனதில் நுழைய இடம் இல்லாமற் போகும்.

கடவுளிடமிருந்து விலகித் திரிந்தபடியே இருக்கும் மனதை ஓயாத முயற்சியினால், திரும்பத் திரும்ப இழுத்து வந்து இஷ்ட தெய்வத்தின் உருவத்தில் நிலைநிறுத்த வேண்டும். இத்தகைய முயற்சி உண்மையான சிரத்தையுடன் கூடியதாக இருந்தால், பகவான் அருள்கூர்ந்து அந்த நிலையை நமக்குத் தந்தருள்வார் என்பது உறுதி. நாம் இதைத் குறித்து எந்தவித ஐயமும் கொள்ள வேண்டியதில்லை.

இலௌகிக விஷயங்களில் அலைந்து திரியும் மனதைத் திரும்பத் திரும்ப முயற்சி செய்வதன் மூலம் இறைவனிடம் நிலைநிறுத்த வேண்டும். இந்தக் கருத்தைப் பகவான் கீதையில் தெரிவித்திருக்கிறார். ஆனால் இந்த உண்மையை, கீதையில் நாம் படித்தால் மட்டும் போதாது. நாமாக முயற்சி செய்து ஆன்மிகச் சாதனைகளைப் பழகாவிட்டால், கீதை சொல்வதைப் போன்ற போதனைகள் நம்முடைய இயல்பாக மாறுவதற்கு வழியில்லை. எந்தவித ஆன்மிகச் சாதனைகளையுமே பழகாமல் திடீரென்று ஜபசித்தியையோ மகானாகவோ ஆகிவிட முடியாது. ஓயாமல் தங்கள் வாழ்க்கையில் ஆன்மிகப் போராட்டங்களை நடத்தியவர்கள்தாம் மகான்களாக ஆகியிருக்கிறார்கள். இந்த உண்மையை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

ஆகவே, மனத்தளர்ச்சிக்கு இடம் கொடுத்து விடாமல், ஆத்ம சாதனங்களைத் தவறாமல் பழகி வருவது என்னும் போரில் இடையறாமல் ஈடுபட்டவர்களாகவே நாம் வாழ்ந்து வர வேண்டும்.

நதியின் இயல்பு கடலையே நோக்கி ஓடுவது. அதுபோலவே மனம் பகவானையே நாடி ஓட வேண்டும். மாலுமியின் திசைகாட்டும் கருவி எப்போதும் வடக்குத் திசையையே நோக்கி இருப்பது போலவும், தைலதாரையைப் போலவும், கடவுளின் நினைவை உள்ளத்தில் நிலைநிறுத்தி வாழ்வதை, சாதகன் தனது இலட்சியமாகவே கொண்டு வாழ வேண்டும்.

''பொறுமையோடு, சிறிது சிறிதாக ஒரு மனிதன் விவேகத்தோடு கூடிய மனஉறுதியால் எல்லா விதமான தீய வழிகளிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டும். அவன் தன் மனதை ஆத்மாவில் நிலைநிறுத்த வேண்டும். ஒருபோதும் வேறு எதைப் பற்றியும் நினைக்கக் கூடாது. ஓய்வு இல்லாத பரபரப்புள்ள மனம் எங்கு எங்கே அலைந்தாலும், அதை மறுபடியும் மறுபடியும் இழுத்துக் கொண்டு வந்து ஆத்மாவிடம் அடங்கி நிற்கச்செய்ய வேண்டும்.''

—கீதை

சிவராத்திரி

திருமுருக கிருபானந்தவாரியார்

சிவம் என்ற சொல்லுக்குத் துன்பம் முதலிய வற்றைப் போக்குவது என்பது பொருள். ''ச்யதி துக்காதிகம் இதி சிவ:'' ராத்திரி என்ற சொல்லுக்கு, சுகத்தைச் செய்வது என்பது பொருள். ''ராதி ஸுகம் இதி ராத்ரி:'' என்றும் துன்பத்தை நீக்கிச் சுகத்தைச் செய்யும் இரவு சிவராத்திரி எனப்படும்.

சிவ விரதங்கள் எட்டு; அவற்றுள் சிவ ராத்திரி ஒன்று. இது மாசி மாதம் கிருஷ்ண பட்சம் சதுர்த்தசி திதியன்று வருவது. அதி காலையில் நீராடித் திருநீறு அணிந்து உருத்தி ராட்ச மாலைபூண்டு, சிவபூஜை செய்து, திரு ஐந்தெழுத்து ஓத வேண்டும். பகல் முழுவதும் உபவாசம் இருத்தல் வேண்டும். மாலையில் மீண்டும் நீராடி, சிவாலயம் சென்று வழிபட



வேண்டும். முடியுமானல் நெய்விளக்கு ஏற்றி, மலரால் அர்ச்சனை செய்வித்து, உள்ளம் குழைந்து உருகி, தேவார திருவாசகங்களை ஓதித் துதிசெய்து, வலம் வந்து, அஷ்டாங்க வணக்கம் புரிந்து வழிபாடு செய்தல் வேண்டும்.

நான்கு காலங்களிலும் சிவபூஜை செய்ய வேண்டும். சிவபூஜை செய்ய இயலாதவர்கள், நான்கு காலங்களிலும் கோயிலில் நடைபெறும் பூஜைகளில் கலந்துகொண்டு தரிசிக்க வேண்டும். நிரம்பிய அன்புடன் திருஐந்தெழுத்து ஓதுதல் இன்றியமையாதது. மறுநாள் காலையில் நீராடி வழிபட்டுப் பாரணம் புரிந்து விரதத்தை முடிக்க வேண்டும். இவ்விதம் செய்பவர்களுடைய எல்லா வினைகளும் நெருப்பில் விழுந்த பஞ்சுப் பொறி போல் எரிந்து கரிந்து சாம்பலாகும்.

பிரம்மனும் திருமாலும், 'நான் பிரம்மம், நான் பிரம்மம்' என்று தருக்கமிட்டுப் போர் புரிந்தவர். அவர்கள் இடையே அடிமுடி காண மாட்டாமல் ஒரு தாணு சோதிமயமாய் நின்றது. அப்படித் தோன்றிய நாள்தான் சிவராத்திரி. அக்காலம் மாசிமாதம் கிருஷ்ணபட்சம், சதுர்த்தசி திதி, சோமவாரம், திருவோண நட்சத்திரம் கூடிய புண்ணிய காலம் என்க.

பிரம்மதேவனும் திருமாலும் துதிக்க, அவர்களின் முன் அந்தத் தாணுவில் சிவமூர்த்தி உருவமாகத் தோன்றியருளிய நேரம் இரவு 14 நாழிகைக்கு மேல் என உணர்க. அவ்வாறு தோன்றிய சிவமூர்த்தி, மாலயனுதி வானவர் யாவருக்கும் திருவருள் புரிந்தார்.

''இந்தச் சிவராத்திரியன்று வழிபட்டோர்க்கு நாம் எல்லா நலன்களையும் அருளுவோம்'' என்று சிவபெருமான் அருள்புரிந்தனர்.

இலிங்கோத்பவகாலம் என்ற 14நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்த காலத்தில், சிவபஞ்சாக்கரம் ஜபிப்போர் எண்ணற்ற நன்மைகளை எளிதில் பெறுவார்கள்.

'காலம்' என்பது கடவுளுக்கு அடுத்தது. காலத்தில் செய்வதற்கு அதிகப் பலன் உண்டு.

ஞாலங் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்

என்பார் திருவள்ளுவதேவர்.

காலத்தில் செய்கிற கருமங்கள் ஒன்றுக்கு ஆயிரமாகப் பெருகி நன்மை செய்யும். ''பருவத்தே பயிர் செய்'' என்ற பழமொழியையும் நினைவுகூர்க. காலம் அறிதல் என்ற ஓர் அதிகாரமே அமைக்கிருர் வள்ளுவர்.

ஆதலால் புண்ணிய விரத நாட்களில் செய்கிற தானத்திற்கும் ஜபத்திற்கும் நிரம்பிய பலன் உண்டு. விரதங்கள் இருந்து, பெருமானை வழிபடுவது நம் நாட்டில் தொன்றுதொட்டு வந்த பழக்கம். விரதம் முதலியவற்றை அநுஷ்டிக்காதவர்கள் நரகம் செல்வர் என்கிருர் அருணகிரிநாதர்.

''சூழ் விரதங்கள் கடிந்த குண்டர்கள்
வாதை நமன்றன் வருந்திடுங் குழி
விழுவாரே''
—திருப்புகழ்

நதிகளில் சிறந்தது கங்கை; விண்மீன்களில் சிறந்தது கதிர்; மரங்களில் சிறந்தது கற்பகம்;

தேவர்களில் சிறந்தவர் திருமால்; பசுக்களில் சிறந்தது காமதேனு; யானைகளில் சிறந்தது ஐராவதம்; மலரில் சிறந்தது தாமரை; புதல்வர்களில் சிறந்தவர் குமரக்கடவுள்; மலைகளில் சிறந்தது இமயம். இப்படியே விரதங்களில் சிறந்தது சிவராத்திரி.

சிவராத்திரியில் சிறந்த நேரம் இலிங்கோத்பவகாலம். இலிங்கோத்பவ காலம் என்பது இரவு பதினன்கு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்த நேரம் என அறிக. இரவு 11-30 மணிக்கு மேல் ஒரு மணி வரை என்று உணர்க.

முழு அளவில் உபவாசம் இருக்க இயலாதவர்கள், பால் பழத்துடனுவது இருக்கலாம். இரவு முழுவதும் கண்விழிக்க இயலாதவர்கள், இலிங்கோத்பவ காலம் வரையாவது கண் விழித்து ஜபம் செய்ய வேண்டும்.

உபவாசத்தினுல் உடல்நலத்திற்கும் வழியுண்டு. சதா உண்டு உண்டு வயிற்றை நிரப்புகிறேம். உணவுகளை அரைத்துச் செரிக்க வைக்கும் கருவிகளுக்கு, மாதத்திற்கு ஒரு நாள் அல்லது ஆண்டுக்கு ஒரு நாளாவது பூரண ஓய்வைத் தர வேண்டாமா? அவ்விதம் ஓய்வு தருவதால் மிகுந்த உடல்நலம் உண்டாகும். உபவாசத்திற்கு மறுநாள் உடம்பு நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும்.

இரண்டாவது, உணவு இன்றி உபவாசம் இருப்பதால் மனம் முதலிய கருவி கரணங்கள் ஒடுங்கும். அதனுல் தியானம் செய்ய நிரம்ப வசதியுண்டு. நன்ருக ஜபம் தியானம் செய்யவும் இறைவனை ஒருமனத்துடன் வழிபடவும் முடிகிறது. ஆதலால் உபவாசத்தை எல்லோரும் சிவராத்திரியில் மேற்கொள்வது உத்தமம். தோசை, இட்டிலி, உப்புமா இவற்றைத் தின்று இருப்பது விரதம் ஆகாது. அது விரதமல்ல; விரோதம்.

சிவராத்திரியன்று விடையவராம் சடைமுடியண்ணலை வழிபட்டு வரம் பெற்ருேர் பலர். மற்ற நாட்களில் ஆயிரம் பஞ்சாக்கரம் ஜபித்த பயன், சிவராத்திரியில் ஒரு பஞ்சாக்கரம் ஜபித்தாலே வரும். இகபர நலன்களை எளிதில் தரவல்லது சிவராத்திரி.

உறுதியுள்ள மனிதனுக்குக் கவலைகள் ஏற்படுவதில்லை. விவேகமுள்ளவனுக்குக் குழப்பங்கள் உண்டாவதில்லை. தைரியமுள்ளவனுக்கு அச்சம் இல்லை. **—கன்பூத்ஸே**

நன்ருக வேயப்பெருத கூரைவீட்டில் மழைநீர் புகுவது போல, பண்படுத்தப்படாத மனத்தில் காம எண்ணங்கள் புகுந்துவிடும். **—புத்தர்**

மனிதன் நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்கிருன். கடைசியில் நிலம் மனிதனையே சொந்தமாக்கிக் கொள்கிறது. **—ஓர் அறிஞர்**

எந்த நாளும் அன்தரியப்படாமல் இருப்பவனே பெருமையடைந்து நித்யானந்தத்தை அடைகிருன். **—வியாசர்**

துரு இரும்பைச் சாப்பிடுவது போல் பொருமை மனிதனை விழுங்கிவிடும். **—பொன்மொழி**

அன்பு எங்கு இருக்கிறதோ அங்கு ஆண்டவனும் இருக்கிருர். **—டால்ஸ்டாய்**

வேலை செய்வதற்கு வேண்டிய உடல்வலிமையையும் வசதிகளையும் பெற்ற ஒருவன், தனக்காவது மற்றவர்களுக்காவது வேலை செய்யாமல் இருந்தால் அவனுக்கு ஆண்டவனின் திருவருள் வாய்க்காது. **—நபிகள் நாயகம்**





ஆன்மிக உரையாடல்

சுவாமி துரியானந்தர்
தமிழாக்கம்: ரா. கணபதி

நவம்பர் 4

சுவாமி துரியானந்தர்: ''ஆரம்ப காலத்தில் நான் நிறைய யாத்திரை செய்தேன். தன்னந் தனியாக, ஒரு பைசாக்கூட இல்லாமல் நர்மதையை நோக்கிச் சென்றேன். எங்கு வேண்டுமானாலும் படுத்துக்கொண்டு விடுவேன். அலஹாபாத், சித்ரகூடம், ரேவா, ஜபல்பூர் வழியாக—முழுக்கக் கால்நடையாகவே சென்றேன். ஒரு குறிப்பிட்ட க்ஷேத்திரத்தை லட்சியமாகக் கொண்டு ஏதேனும் ஒரு யாத்திரை தொடங்கிவிடுவேன். ஜனங்களை வழிகேட்டுக் கொண்டு மேலே மேலே போனபடி இருப்பேன். அடுத்ததாக ஹரித்வாரம், ஹ்ருஷிகேசம், உத்தரகாசிக்குச் சென்றேன். அப்போது [ஹிமாசல] மலைகளிலிருந்து இறங்கி வராமலே இருந்துவிடலாம் என்று நினைத்ததுண்டு. உலகம் என்ற ஒன்று இருப்பதையே மறந்து, ஈச்வர சாட்சாத்காரம் மட்டுமே குறியாக, கட்வால் மலைகளில் ஆனந்தமாகக் காலம் கழித்தேன். அப்பொழுது நிறையத் தியானம் புரிந்தேன்; ஏராளமாகப் படித்தேன். ஆனால் சுவாமிஜி (விவேகானந்தர்) என்னை இறங்கி வருமாறு செய்துவிட்டார். அவரை நான் மீரட்டில் சந்தித்தேன். டில்லியில் நாங்கள் ஏழெட்டுப் பேர் ஒன்றாக வசித்தோம். பிறகு மகராஜ் (சுவாமி பிரம்மானந்தர்) ஜவல்ஜிக்குப் போவது பற்றிக் கூறி, என்னையும் தம்முடன் வரச் சொன்னார். ஆதலால், அவரோடு ஜவல்ஜி, கோபிநாத்பூர், பைஜ்நாத், படான்கோட், மூல்தான், குஜ்ரான்வாலா, மாண்ட்கோமரி முதலான இடங்களுக்குச் சென்றேன். பிற்பாடு கராச்சி வழியாகப் பம்பாய் வந்தடைந்தோம். அமெரிக்காவுக்குக் கப்பலேற இருந்த சுவாமிஜியைப் பம்பாயில் சந்தித்தோம். சிகாகோவில் நடைபெற இருந்த மதங்கள் மாநாடு தமக்காகவே அமைக்கப்பட்டது என்றார் சுவாமிஜி—எதிர்காலத்தை அன்றே கண்டாற்போல்! மகராஜைத் தனியாகச் சஞ்சாரம் செய்யவிட்டு, நான் மடத்துக்குத் திரும்பிவிட வேண்டும் என்று சுவாமிஜி கூறினர்.

''அபுமலையில் சில காலம் தங்கினேன். அங்கிருந்து அஜ்மேருக்கும் புஷ்கரத்துக்கும் சென்று பிறகு பிருந்தாவனம் அடைந்து அங்கு ஆறு மாதங்கள் தங்கினேன். அடுத்த ஆறு மாதங்களை லக்னௌவில் கழித்தேன். அதன்பின் அயோத்திக்குச் சென்றேன். அயோத்தியில் மகாபுருஷ் (சுவாமி சிவானந்தர்) என்னைச் சந்தித்து மடத்துக்கு வருமாறு அழைத்தார்.

''நிறையப் பிரயாணம் செய்தாலும், அப்போதும் நிறையப் படித்துக்கொண்டே இருந்தேன். பிருந்தாவனத்தில் பக்தி நூல்கள் ஏராளமாகப் படித்தேன். ஆன்மிக முயற்சிகளைத் தொடராமல் நிறையச் சஞ்சாரம் மட்டும் செய்வது நல்லதல்ல.

''பூரி ஜகந்நாத ஆலயத்தில் திடுமென என் செவிகளில் ஓர் ஒலி பாய்ந்தது; என் இதயம் பேரானந்தத்தில் நிரம்பியது; நான் காற்றிலே மிதப்பது போல இருந்தது! பல பண்களில் அந்த ஒலி தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தது. என் முழு மனமும் அதனால் வசியமுற்றிருந்தது. அண்ட பகிரண்டங்களின் இசை எனப்படும் அநாஹத த்வனி குறித்து நான் படித்திருந்தது நினைவு வந்தது. இது அதுவாகத்தான் இருக்க வேண்டும் எனக் கருதினேன்.

''உஜ்ஜயினியில் ஓர் இரவு நான் ஒரு மரத்தடியில் உறங்கிக்கொண்டிருந்தேன். புயல் வந்தது. திடுமென எவரோ என் உடலைத் தொட்டார். நான் விழித்தெழுந்தேன். (மரத்தடியிலிருந்து வெளிவந்தேன்.) அந்த க்ஷணமே, நான் படுத்திருந்த இடத்தில் ஒரு கிளை முறிந்து விழுந்தது.

''ஜீவன்முக்தி நிலையை அனுபவத்தில் பெறுவதற்கே வாழ்க்கை ஏற்பட்டிருக்கிறது என்று கூறும் சுலோகத்தை முதல்முறையாகப் படித்தவுடன் நான் ஆனந்தத்தில் துள்ளினேன். ஏனெனில் என் வாழ்க்கையின் நோக்கமாக இருந்தது அதுவேதான்.

'' 'யோகத்தின் முதல் வாயிற்படியாக இருப்பது வாக்குக் கட்டுப்பாடு, பிறரிடமிருந்து எப்பொருளும் ஏற்காமை, எதையும் எதிர்பாராதிருப்பது, ஆசையின்மை, தனிமையில் நாட்டம் ஆகியனவே' என்ற கருத்துள்ள சுலோகம் என்மீது பெருத்த மாற்றத்தை உண்டாக்கியது. அதற்கு முன் நான் நிரம்பப் பேசி வந்தேன். இதைப் படித்தவுடன், 'என்ன! யோகத்தின் முதல் நுழைவாயிலில்கூட நாம் புகவில்லையே!' என எண்ணினேன். இனி என் பேச்சைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சங்கற்பித்தேன். யாரிடமும் பேசாமலே இருந்தேன். தன்னந்தனியாய் எனக்கு நானே என்று வசித்தேன். எனக்குத் தோன்றிய சிறந்த எண்ணப்படியே செயல் புரிந்தேன். நவராத்திரி ஒன்பது நாட்களும் ஒரு வார்த்தைகூடப் பேசாமல் இருந்தேன்.

''சங்கரர் (ஆதி சங்கராசாரியர்) தாம் என் வாழ்க்கையின் வடிவை வார்ப்பித்தவர். குருமகராஜிடம் வருமுன் சங்கரரின் ஒரே ஒரு சுலோகம்கூட என்னை ஒருபடி உயர்த்திவிடும், எனக்கு ஒளி வெள்ளம் பாய்ச்சும். அந்நாட்களில் சுலோகங்களில் நான் புதுப் புதுப் பொருள்களைக் கண்டு வந்தேன். பொருள்களை ஏற்கும் பரிக்ரஹம் என்பது என்ன? பிறர் அன்பளிப்பாக வழங்குவதை ஏற்காத போதிலுங்கூட ஒருவருக்குப் பரிக்ரஹம் ஏற்படலாம். எவ்வாறெனில், எதிர்கால ஜீவிதத்துக்கான சாதனங்களைப் பற்றிச் சிந்தனை செய்துவிட்டால், இதுவே பரிக்ரஹம்தான். பிறப்பும் இறப்பும், எல்லாமும் பரிக்ரஹத்தைத் தொடர்ந்து வருவனவே. நாம் இப்போதே எதிர்காலத்துக்கான வழிவகைகளைச் சிந்தித்துத்தான் வருகிறோம். நம் மனம் எங்கே உள்ளதோ, அங்கேதான் நாமும் இருக்கிறோம். நீ பரிக்ரஹம் செய்யாதபோது உன் மனம் எங்கு இருக்கும்? ஆத்மாவில்தான். அபரிக்ரஹத்தில் மனமானது இயற்கையாகவே ஆத்மாவில்தான் பதிந்திருக்கும். எனவே அபரிக்ரஹம் என்ற ஒன்றை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதே உன்னை உச்சி நிலைக்குக் கொண்டுவிட முடியும்.

''ஒரு முறை, என் தோழர்கள் சென்ற பிறகும் நான் தனியாகக் கங்கைக் கரையில் அமர்ந்திருந்தேன். தியானம் செய்யத் தொடங்கினேன். சிறிது நேரத்துக்குப் பின் மணிஇரண்டு அடித்தது. 'வா, வீட்டுக்குப் போகலாம்' என்று திடுமென எவரோ கூறினர். இந்த வார்த்தைகள் என் தலைமேல் குண்டாந்தடி அடி போல் விழுந்ததாகத் தோன்றியது. என் மனத்திலிருந்தேதான் அவை எழும்பியிருக்கின்றன என்று புரிந்து கொண்டேன். வாஸ்தவத்தில் வீடு என்றே ஒன்று எனக்கு இல்லை. ஆயினும் மனமானது நான் திரும்புவதற்கான வீடொன்று இருப்பதாக எண்ணியிருந்திருக்கிறது. மனத்தின் இந்தப் போக்கை நான் அழிக்க வேண்டும் என்று அப்போது சங்கற்பம் செய்தேன்.

''ஆகா! அந்த நாட்கள் என் நினைவில் வருகின்றன. நான் ஸ்ரீநகர் கட்டடத்தில் வசித்தபோது, மிகவும் அதிகாலையிலே எழுந்து ஸ்நானம் செய்வது வழக்கம். பிறகு தியானத்தில் அமர்வேன். அப்புறம் படிப்பேன். பதினொரு மணிக்கு எழுந்திருந்து, ஒரு மணி நேரத்தில் உணவு ஈட்டுவேன். பிறகு மறுபடி தியானமும் ஜபமும் தொடங்குவேன். இப்படியே ஒவ்வொரு நாளும். அங்கேதான் நான் எட்டு உபநிஷதங்களை மனப்பாடம் செய்தேன். நான் படிக்கும் ஒவ்வொரு மந்திரத்தையும் குறித்து ஆழ்ந்து சிந்திப்பேன். அது எப்பேர்ப்பட்ட வர்ணிக்கவொண்ணாத ஆனந்தமாக இருந்தது! சங்கருடைய பாஷ்யமும், ஞானானந்தரின் விரிவுரையும் படிப்பது என் வழக்கம். ஆழ்ந்து சிந்திப்பதனால் இவற்றுக்கு மேற்பட்டும் விளக்க ஒளி வரும்.''



மூன்று சுமைகள்

அ. லெ. நடராஜன்

கரடு முரடான மலைப்பாங்குப் பிரதேசத்தில் இஸ்லாமிய மார்க்கத்தில் பற்றுதலுள்ள துறவி ஒருவர் இருந்தார். ஆண்டவனை வழிபடுவதிலும் அடியவர்களுக்கு உதவுவதிலும் காலத்தையும் பொழுதையும் அவர் கழித்து வந்தார். காய் கிழங்குகளைத் தின்று, ஓடையில் ஓடும் நீரைப் பருகி, ஒரு குகையில் அவர் வசித்தார்.

முன்பு ஒரு பெரிய பள்ளிவாசலின் நிர்வாகியாக இருந்து, சுகபோகமாக வாழ்ந்தவர் அவர். அங்கே நிலவிய வஞ்சனையும் சூழ்ச்சியும் பதவி வேட்டையும் அவருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே நிர்வாகப் பொறுப்பிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு, காடு சென்று, தனித்து அவர் வாழ்ந்தார். தியாகசீலராகவும் பக்திமானாகவும் வாழ்ந்தார். ஆகவே அவர் புகழ் எங்கும் பரவியது.

கோடைக்காலத்தில் காட்டு வழியே பிரயாணம் செய்பவர்களுக்கு, அவர் ஓடையிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து கொடுத்து அவர்களின் தாகத்தைத் தணிவிப்பார். நோயால் வாடுபவர்களுக்குச் சிகிச்சை செய்வார். மனம் நலிந்தோருக்கு ஆறுதல் சொல்லித் தேற்றுவார். காயம் அடைந்தவர்களுக்குக் கட்டுகள் கட்டி விடுவார்.

அவர் காலத்திலேயே பிரசித்தமான கொள்ளைக்கூட்டத் தலைவன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் அகம்மது. அவனிடம் ஏராளமான அடிமைகளும் வேலைக்காரர்களும் இருந்தார்கள். கொள்ளையடிக்கப்பட்ட சொத்து, குவியல் குவியலாக இருந்தது.

அகம்மது அந்தத் துறவியைப் பற்றிக் கேள்வியுற்றான். கொள்ளைக் கூட்டத்தின் தலைவனான தன்னை அவர் ஏற்றுக் கொள்வாரா என்று அவன் ஐயமுற்றான். தன் புகழும் துறவியின் புகழும் ஒன்று போலவே பரவியிருப்பதால், ஒருவேளை துறவி தன்னை அங்கீகரிப்பார் என்ற எண்ணம் திருடனுக்கு உண்டாயிற்று.

அவன் துறவியிடம் சென்றான். அவரைச் சந்தித்து, ''பெரியவரே, எனக்குக் கீழ்ப்படிந்து நடக்க ஐந்நூறு வாள்வீரர்கள் எப்போதும் தயாராக இருக்கிறார்கள். அளவற்ற செல்வம் இருக்கிறது; அடிமைகள் ஆயிரக் கணக்கில் இருக்கின்றனர். அவற்றையெல்லாம் அப்படியே வைத்துக்கொண்டு, எல்லையற்ற நிரந்தர இன்பத்தில் திளைப்பது எப்படி?'' என்று கேட்டான்.

துறவி, குகையை விட்டு வெளியே வந்தார். கொள்ளைக் கூட்டத் தலைவனைப் பக்கத்திலிருக்கும் ஓர் இடத்துக்கு அழைத்துப் போனார். அங்கே மூன்று பெரிய கற்கள் இருந்தன. அவற்றை முதுகில் சுமந்து வருமாறு கொள்ளைக்கூட்டத் தலைவனிடம் துறவி சொன்னார்.

துறவியின் கட்டளைப்படி மூன்று கற்களையும் தன் முதுகில் கொள்ளைக் கூட்டத் தலைவன் தூக்கிக்கொண்டான். பிறகு துறவி அவனிடம், ''என்னைத் தொடர்ந்து வா'' என்று கூறினார்.

அகம்மது தொடர்ந்து சென்றான். செங்குத்தான மலைப்பாதையில் அவர்கள் ஏறினார்கள். துறவி எளிதாக ஏறிச் சென்றார். கொள்ளைக் கூட்டத் தலைவனால் ஏற முடியவில்லை.

அவன் துறவியை நோக்கி, ''ஐயா! ஏறுவது சிரமமாக இருக்கிறது. என்ன செய்வது?'' என்று கேட்டான்.

''கற்களில் ஒன்றை மட்டும் போட்டுவிட்டு என் பின்னே வா'' என்று துறவி சொன்னார்.

அகம்மது அதன்படி செய்தான். பிறகு இருவரும் சிறிது தூரம் சென்றார்கள். மீண்டும் கொள்ளைக் கூட்டத் தலைவன் துறவியிடம், ''ஐயா! இப்போதும் ஏறுவது சிரமமாய் இருக்கிறதே?'' என்று தெரிவித்துக்கொண்டான்.

''அப்படியானால் மற்றும் ஒரு கல்லைப் போட்டுவிட்டு, என்னைத் தொடர்ந்து வா'' என்று கூறினார் துறவி.

துறவி சொன்னபடி இரண்டாவது கல்லையும் போட்டுவிட்டுத் தலைவன் அவரைத் தொடர்ந்தான்.

சிறிது தூரம் சென்றதும் செங்குத்து அதிகமாக இருந்ததனால் ஏறுவது மிக மிகச் சிரமமாக இருந்தது. ஆகவே திருடர் தலைவன் துறவியிடம், ''ஐயா! என்னால் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. என்ன செய்வேன்?'' என்று கேட்டான்.

''சரி, மூன்றாவது கல்லையும் போட்டுவிட்டு என்னைத் தொடர்ந்து வா'' என்று சொன்னார் துறவி.

அதன்படியே செய்துவிட்டுத் திருடர் தலைவன் அவரைத் தொடர்ந்தான். இப்போது அவனுக்கு ஏறுவது மிகவும் சுலபமாக இருந்தது. திருடர் தலைவனும் துறவியும் மலையுச்சியை எளிதில் அடைந்தார்கள்.

அப்போது துறவி கொள்ளைக் கூட்டத் தலைவனை நோக்கி, ''மகனே! புனித உலகத்தை அடைய முடியாதபடி மூன்று சுமைகள் உன்னைத் தடுக்கின்றன. ஆகையால் அவற்றை நீ புறக்கணித்துவிடு. முதலாவது சுமையாக உன்னிடம் இருக்கும் கொள்ளைக் கூட்டத்தைக் கலைத்துவிடு. இரண்டாவது சுமையாக உள்ள அடிமைகளுக்கு விடுதலை வழங்கு. மூன்றாவது சுமையாக இருக்கும் தீய வழியில் சேகரித்த பொருள்களை உரியவர்களிடம் சேர்ப்பித்துவிடு. அதிகாரம், செல்வம், இன்பத்தில் நாட்டம் ஆகிய மூன்றையும் ஒழித்துக் கடவுளை வழிபட வேண்டும். அவ்விதம் செய்யாத ஒருவனால் நற்கதியை அடைய முடியாது'' என்று புத்திமதி சொன்னார்.

துறவியின் அறிவுரை, கொள்ளைக் கூட்டத் தலைவனின் கண்களைத் திறந்தது. அவன் தீய வாழ்க்கையிலிருந்து விடுபட்டுப் பரிசுத்த வாழ்க்கையை மேற்கொண்டான்.

நற்கதி அடைய விரும்புவோர், நாணயமாக வாழ வேண்டும். பணம், பதவி, பகட்டு ஆகியவற்றினால் ஒருவன் ஒருபோதும் மேன்மையடைய முடியாது.



அப்பர் செய்த அற்புதங்கள்

குகப்ரியை

வாழ்க்கை, இலக்கியம், சமயம் இம் மூன்றையும் ஒன்றை விட்டொன்று பிரிக்க முடியாதபடி வைத்திருக்கின்றனர் நமது முன்னோர். இப்படிப்பட்ட செல்வங்கள்தாம் சமயம் வளர்த்த இலக்கியங்கள். அவற்றுள் முன் அணியிலே நிற்பவைதாம் தேவார திருவாசகங்கள். இவற்றைத் திருமுறைகள் என்று போற்றிப் பணிந்து விழாக்களும் எடுத்து மகிழ்கிறது தமிழ் உலகம்.

'எல்லாம் தெய்வமயம்' என்று கண்ட நம் முன்னோர்கள், நமது அருமையான அமுதொழுகும் தமிழ்மொழியையும் நமது நாட்டையும் கூட அன்னையின் வடிவமாகவே காண்கின்றனர். பாரத மாதா, வந்தே மாதரம் என்ற சொற்கள் எப்படி எழுந்தன?

தமிழன்னையின் வடிவத்தைப் பற்றிப் பேசும்பொழுது, அன்னை அலங்காரமாக, சர்வாபரண பூஷிதையாக நம் கண்களுக்கெதிரே கொலுவிற்றிருக்கிறாள். அவளுடைய அணிகலன்கள்தாம் என்ன அற்புதம்! மாலைகள்தாம் எத்தனை! அவள் சிரத்திலே சூடாமணி, மார்பிலே சிந்தாமணி, செங்கரங்களிலே வளையாபதி, அழகிய செவிகளிலே குண்டலகேசி, இடையிலே மணிமேகலை, செந்தாமரை அடிகளிலே சிலப்பதிகாரம் என்ற அழகிய பொற்சிலம்பைச் சொற்சிலம்பாக அணிந்திருக்கிறாளாம்.

இது மட்டுமா? மாலைகள்தாம் எத்தனை! தேவார, திருவாசகங்கள், நாலாயிர திவ்யப்பிரபந்தம் ஆகிய பாமாலைகள் அழகு செய்கின்றன. இவற்றுடன் வள்ளுவன் குறளும் கம்பனது கவிமாலையும் மேலும் வண்ணவண்ணமாக ஒளி வீசுகின்றன. புதுமைக்கவிஞன் பாரதியின் ஒலிமாலை முடிமாலையாகக் காட்சி தருகின்றது. ஆனால் இவற்றுள் அப்பர்பெருமானது தேவாரங்கள் அவள் முகத்தைப் பேருவகையால் மலரச் செய்கின்றன. சைவ சமயத்தைப் பரப்பி நிலைநிறுத்திய பலருள் இவர் முதலிடம் பெறுகிறார். ஏன்?

திருமுறைகள் பன்னிரண்டு. முதல் மூன்றும் பாலைக் கொடுத்து ஆட்கொண்ட சின்னஞ்சிறு குழந்தை ஞானசம்பந்தப் பெருமானது அருள் வாக்கு. அது திருக்கடைக்காப்பு என்று பெயர் பெறுகிறது. ஆனால் அப்பரின் சொல்மாலைகளே தேவாரம், தேவதேவனாகிய சிவபெருமானுக்கு ஆரம் என்ற பெயரைப் பெறுகின்றன. இவர் பிறமதம் புகுந்து மீண்டும் பழவினைப் பயனால் சிவமதம் புகுந்த மகான். இவர் 85 வயது வரை வாழ்ந்தார். அறிவும் ஆற்றலும் அநுபவமும் இவர் செஞ்சொற் கவிதைகளில் மின்னலிடுகின்றன. இவை தேன்சிந்தும் கவிதைகள்.

இவரது இயற்பெயர் மருணீக்கியார். ஜைன சமயம் சேர்ந்து தருமசேனர் ஆனார். இவர் தமக்கை திலகவதியார் தம்பியின் பொருட்டே உயிர் தாங்கினார். பல்லவன் புலிகேசியுடன் செய்த வாதாவிப் போரிலே இவர் மனத்தால் வரித்த வீரர் உயிரிழக்கவே, தவக்கோலத்திலே தம்பியை ஆதரித்தார். அவர் ஜைன சமயம் சேர்ந்ததும், இவர் திருவதிகை வீரட்டானம் என்ற தலத்திலே தங்கி இறைவனை வழிபட்டு வந்தார். இறைவன் தருமசேனரை எப்படித் தடுத்து ஆட்கொண்டார் என்பதுதான் அற்புதங்கள் நிறைந்தது.

மகேந்திரப் பல்லவனது சபையிலே மிகப் பெரிய முதன்மந்திரிப் பதவி வகித்தார் தருமசேனர். அரசனுக்கு இவரிடம் மிகுந்த மதிப்பு. அரசனது மெய்யன்புக்கே உரிய இவருக்குக் கடுமையான சூலைநோய் - வயிற்றுவலி - வந்தது. அரண்மனை மருத்துவரே கைவிரித்தனர். அந்தப் பலவீனமான நிலையிலேதான் தம் அன்புத் தமக்கையின் நினைவும், அவரது அருமையும் தோன்றின; சைவ சமயத்தை விட்டு வந்தோமே என்ற ஏக்கமும் எழுந்தது.

மெல்ல மெல்லப் பிறர் அறியாமல் குணபரேச்சுரம் என்ற வீரட்டானக் கோயிலுக்கு வந்து சேருகிறார். இந்தக் குணபரேச்சுரம் திருவதிகை என்ற பெயருடன் நடுக்காட்டில் பண்ணுருட்டிக்கு அருகே உள்ளது. விடியற்காலை. மாதவச்செல்வி போல, கோயிலிலே வீதி விளக்கி அலகிட்டுத் தம்மை நிவேதனம் செய்து

கொண்டிருக்கிறார் தமக்கை. **'அக்கா! வந்து விட்டேன்!'** என்ற ஒலி அவரைத் திகைக்க வைக்கிறது. வயிற்று வலியினுல் கூனிக் குறுகியிருந்த தம்பியை அப்படியே ஆரத் தழுவிக்கொள்கிருர் தமக்கை. கையை நீட்டு என்று பஞ்சாட்சரத்தை ஓதித் திருநீற்றை, விபூதியைக் கொடுக்கிருர். வாங்கி நெற்றியில் அணிந்து, தமக்கையைத் தொடர்ந்து போகிருர் தருமசேனர். கோயிலின் உட்பிராகாரத்திலே ஒரு சிறிய கிணறு. பரமானந்த கூபம். அதிலே தண்ணீரை இறைத்துக் கைகொடுக்கிருர். அவ்வளவுதான், யமனுக வந்து வாட்டிய சூலேநோய் பறந்தது. அருமையான தேவாரம் பிறந்தது:

'கூற்ருயினவாறு விலக்ககிலீர்,
கொடுமை பல செய்தன நானறியேன்'

என்று தொடங்கி,

'ஆற்றேனடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே!'

என்ற பத்துப் பாடல் முடியுமுன் கூனலும் நிமிர்ந்தது. கண்களில் நீர் பெருகத் திருவருளே நினைந்து வியந்தார். 'உற்றேமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்ற உறுதியும் பிறந்தது. சைவம் மலர்ந்தது.

அங்கே பல்லவனது சபையிலே இவர் வரவு காணுது தவித்திருந்த அரசன் செவிகளிலே, தருமசேனர் சொல்லாமல் ஓடிவிட்ட செய்தி நொடியிலே விழுந்துவிட்டது. கோபத்தால் அரசன் கொதித்து எழுந்தான். மதம் மாறியது தெரியாமல், 'அழைத்து வா' என்று குதிரை வீரரை அனுப்பினுன். வந்து அழைத்தனர்.

'நான் அரசசேவகனல்லன், பரிபூரணனுக்கே அடிமை' என்று நினைத்து,

''நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்''

என்ருர். ஏற்கனவே பெரிய பதவி வகித்தவர். ஆகவே வீரர்கள் பயந்து மீண்டும் காஞ்சிநகருக்குப் பல்லவ சக்கரவர்த்தியின் முன்னே வந்து அவர் நிலேயைச் சொன்னுர்கள். கரைபீறி எழுந்தது வெஞ்சினம். ''ஓகோ! அவ்வளவு துணிந்து விட்டானு? அரசாங்கப் பதவி அப்படிச் செய்து விட்டது. மரியாதை வேண்டாம். கைதியாகக் கொண்டு வாருங்கள்!'' என்று சீறினுன் பல்லவன். அவ்வளவுதான், சிறு படையுடன் புறப்பட்டது கட்டளே. கைப்பிடியாய்ப் பிடித்தும் வந்தனர். கைதியாக வருகிருர் தருமசேனர்.

சபை கூடியிருக்கிறது. கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பொறுப்பில்லாமல் விடை வருகிறது. ''இவனே உயிருடன் விட்டால் அரசையே கவிழ்த்துவிடுவான். இவன் பிறமத ஒற்றன். இங்கிருந்து சகல சாஸ்திரங்களேயும், நம் அரசியல் நெளிவு சுளிவுகளேயும் தெரிந்துகொண்டு சதி செய்கிருன். உயிருடன் விடுவது மதியீனம். இவனுக்கு விஷம் கொடுங்கள்!'' என்று கூசாமல் அரசன் கட்டளேயிட்டுவிட்டான். பகைமை என்று வந்துவிட்டால் பிறகு தயை ஏது? புராணங்களிலே பிரகலாதனுக்கு விஷமிட்டான் தந்தை. என்ன நேர்ந்தது? அவனே முதல் சத்தியாக்கிரகி என்று பேசுகிருேம். நமது தருமசேனர் இரண்டாவது சத்தியாக்கிரகி.

நஞ்சுண்ட அண்ணலேத் தியானித்து விஷத்தைக் குடித்துவிட்டார். விஷம் என்ன செய்யும்? அமுதமாயிற்று. தருமசேனர் பிழைத்து விட்டார். இந்த அற்புதத்தைச் சேக்கிழார் பெருமான்,

'அடியவர்க்கு நஞ்சு அமுதம் ஆவதும் ஓர்
அற்புதமோ?'

என்கிருர். 'நஞ்சு அமுது ஆக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே!' நனிபள்ளி என்ற தலத்திலேயுள்ள சிவபெருமான் அமுதாக்கினுர் என்கிருர். அவ்வளவுதான், அரசனது நெஞ்சு தோல்வியினுலே பொங்குகிறது. ''சரி, இவனேச் சுண்ணும்புக் காளவாய் நீற்றறையிலே போடுங்கள்!'' என்கிருன். பண்ணுருட்டிக்கருகிலே உள்ள ஓர் இடம்தான் அந்த நீற்றறை. அது ஓர் ஓடையாக இருக்கிறது இப்பொழுது. ''நீற்றறையிலே ஏழு நாள் இடுங்கள்'' என்ற கட்டளே.

அந்த அறையிலே போட்டுக் கதவையும் இட்டுக் காவல் வைத்தாயிற்று. அவர் குவிந்த மனத்துடன் சிவபெருமானேயே தியானித்துச் சமாதி நிலேயிலே அமருமுன் ஒரு கவிதை வருகிறது. அந்த வெம்மையின் நடுவே இறைவனது திருவடி எப்படி இருக்கிறது என்பதைச் சின்னஞ்சிறிய சொற்களால் பாடுகிருர்:

மாசில் வீணேயும், மாலே மதியமும்,
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்,
மூசு வண்டுறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணேயடி நீழலே.

வாரம் ஒன்றும் ஆயிற்று. வந்து கதவைத் திறந்தனர். அவர் தியானநிலையில் அமர்ந்திருந்தார். நீற்றறை, சில்லென்றிருந்தது. சமணர் திகைத்தனர். 'இவன் மந்திரம் கற்றவன். நம் மதத்திலிருந்து கற்றவைகளை நமக்கே எதிராக உபயோகிக்கிறான்' என்று எண்ணினர். மீண்டும் கைதியாக்கிக் குதிரையின்மேல் ஏற்றிக் காஞ்சிநகரை அடைகின்றனர்.

அப்பொழுதும் அவர் முகத்திலே புன்னகை. சபை கூடியிருக்கிறது. எல்லோர் முகத்திலும் கவலை. நெடுநேரம் விவாதம். பிறகு, ''இவனை யானையைக் கொண்டு கொல்லுவோம்'' என்றான் அரசன். அவ்வளவுதான், திருவாக்கிற்கு மறுவாக்கு ஏது? கொல்யானைகள் பல்லவ சாம்ராஜ்யத்திலே பிரசித்தி பெற்றவை. யானைப் படைத்தலைவர்கள்கூட நெருங்க அஞ்சுவர். அத்தகைய கொல்யானையைக் கொண்டு வர விரைந்தனர் வீரர்கள். தமது நிகரற்ற பாடல்களால் இறைவனாலேயே நாவுக்கு அரசு என்று பாராட்டப்பெற்ற அப்பர் பெருமானை, மைதானமாகிற கொலைக்களத்துக்கு அழைத்துப் போக நெருங்கினர்.

* * *

பிரம்மாண்டமான பெரிய மைதானம். அதன் ஒரு கோடியிலே பெரும் பாறை. அதன் மேல்தான் தருமசேனர் அமர வேண்டும். வேறொரு கோடியிலிருந்து யானை கோப மூட்டப்பட்டுத் துரத்தப்படும். ஆயிற்று, இவர் அமர்ந்தாயிற்று. யானையும் மிகப் பயங்கரமாகப் பிளிறிக்கொண்டும் தும்மிக்கொண்டும் வந்து நின்றுகொண்டது. இவர் நிமிர்ந்து பார்த்தார். கண்ட காட்சி இவரைத் திகைக்கச் செய்தது. கயிலை மலையல்லவா தெரிகிறது! அழகிய கயிலையங்கிரி. அதன் மீது சிவபெருமான் உமாதேவியாரோடு காட்சி தருகிறார். அந்தக் காட்சியிலே மெய்ம்மறந்து போகிறார். அந்த மலை அசைகிறது. ஏன், அசைவானேன்? அதன் காரணமும் தெரிகிறது.

வாரணம் பொருத மார்பும்
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவர்க் கேற்ப நயம்பட உரைத்த
நாவும்—(சாமவேதம் பாடிய)
தாரணி மௌலி பத்தும், சங்கரன்
கொடுத்த வாளும்.

'ஓகோ! இராவணன் பெயர்க்கிறானா? அதோ அவனே தெரிகிறானே! சிவபெருமான் கருணை மிகுந்து வாளையல்லவா கொடுக்கிறார்? சாம கானம் கேட்ட மகிழ்ச்சியா?' என்று நினைக்கிறார் அப்பர்பெருமான்.

'நரம்பெழு கைகள்புடைத்து, நங்கைநடுங்க
உரங்களெல்லாம் கொண்டு எடுத்தான்—
தலை ஒன்பதும் ஒன்றும் அலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்
பொழில் வீரட்டஞ் சூழ்ந்து
நிரம்பு கெடிலப்புனலும் உடையார்
ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச
வருவதுமில்லை'

என்று தொடங்கிப் பத்துப் பாடல்கள் அந்த நெருக்கடியான நிலையிலே பிறக்கின்றன.

என்ன நேர்ந்தது! மலைபோல் காட்சி தந்த அந்தக் கொல்யானை அவரிடம் அடியிட்டு நெருங்கி வந்தது. மெல்ல மெல்ல மூன்று முறை வலம் வந்து பணிந்தது. துதிக்கையைத் தரையிலடித்து விடைபெற்று மெல்ல மெல்ல அமைதியாக நடந்து சென்றதாம். என்ன ஆச்சரியம்! அதைத்தான் ஆனந்தக் களிப்பிலே பேசுகின்றார் தொண்டர்புராணம் வகுத்தளித்த பெரியார் சேக்கிழார்.

யானையின் செய்தி கேட்டான் மன்னன். கொல்யானை வணங்கியதா? இதென்ன! மாயமா? மந்திரமா? எத்தனை எத்தனையோ பகைவர்களை வென்ற இந்தப் பல்லவ அரசு ஒரு தனிமனிதனுக்குத் தண்டனை அளிக்க முடியவில்லையா? மூன்று முறை ஆயிற்று. இனி இப்படியே இருக்க முடியுமா? முக்கியமான ஆலோசனை சபை கூடியது. ''இந்தத் தூர்த்தனை, துரோகியை எப்படியாவது ஒழித்தால்தான் அரசும் மதமும் பிழைக்கும். ஆகவே கல் தூணிலே கட்டிக் கடலில் தள்ளிவிடுவோம்'' என்று முடிவு செய்தனர்.

* * *

மாமல்லபுரம் கடற்கரை. பிரம்மாண்டமான கல்தூண். வீரர்கள் இவரை வைத்து உறுதியான கயிறுகளையும் சங்கிலிகளையும் சேர்த்துப் பிணித்தனர்; கடலிலே தள்ளினர். ஆழங்காண முடியாத பெருங்கடல். 'ஒழிந்தான் துரோகி' என்று பெருமூச்சு விட்டான் பல்லவ சக்கரவர்த்தி. மக்கள் கூட்டம் மெல்லக் கலைந்தது.

பிணித்து வைக்கக் கொணர்ந்தபோதே அவர் தியானத்தில் ஆழ்ந்தார். **ஓம் நம: சிவாய** என்று அலைகள் ஒலி எழுப்புவது அவர் செவி களுள் தெளிவாய்க் கேட்டது.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.

கல்தூணைப் பூட்டி ஓர் கடலில் இட்டாலும், நல்ல துணை எது? சிவபஞ்சாட்சரம் ஒன்றுதான் என்று பாடலானார்.

பஞ்சாட்சரப் பதிகம் பாடியவுடனேயே என்ன நேர்ந்தது? தூண், அந்த மாபெரும் கல்தூண் தெப்பமாக மிதந்து மிதந்து தெற்கு நோக்கி நகர்ந்தது. அந்தப் பேரொலியிலே, அலை யோசையிலே பதிகமும் மிதந்தது. இந்த அதிச யத்தை, ''கருநெடுங்கடலுள் கல்லும் மிதந் ததே'' என்கிறார் சேக்கிழார். மிதந்து மிதந் திருப்பாதிரிப்புலியூர் அருகே கரையில் ஒதுங் கியது. இப்பொழுதும் 'கரை ஏறவிட்ட குப்பம்' என்ற ஊரைக் காணலாம். அப்பர் திருவிழாவில் அங்கே சிவபெருமான் காட்சி தருவதையும் காணலாம். சங்கிலிகளும் கயிறும் என்ன ஆயின? யாருக்குத் தெரியும்? கரை யேறிய அவர் வியந்து திகைக்கிறார். இந்த அருள் செய்த அற்புதம் எளியனான எனக்கு எப்படிக் கிடைத்தது?

கள்ளத்தேன், கடியேன், கவலைக்கடல்
வெள்ளத்தேனுக்கு எவ்வாறு விளைந்ததே?
கள்ளத்தேன், பிறமதம் புகுந்த கடியேன்

என்று தம்மையே இகழ்ந்து பேசுகிறார்.

கரையிலிருந்த பெண்மணிகள் ஆச்சரியத் தால் திகைத்து அப்பரின் தோற்றத்தைக் கண்டு நெருங்கி வந்து வணங்குகின்றனர். அந்தப் பெண்களுக்கு இறைவன் சர்வவியாபி என் பதை,

''விறகில் தீயினன், பாலில் படுநெய் போல்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்''

என்று அப்பர் விளக்குகிறார்.

இப்படிப் பாமர ரஞ்சகமான பாடல்கள் ஏராளம்.

இவரது முக்கியமான தனிச்சிறப்பு, உழவா ரம் என்ற ஆயுதம் தாங்கிக் கோயில்களில் புல், பூண்டு, முள் இவை செதுக்கியது. கோயிலிலே அறுபத்துமூவர் கற்சிலை வடிவிலே இவரிடம் உழவாரத்தைக் காணலாம்.

இவருக்குச் சிவபெருமான் திருவையாற்றிலே கைலாசக் காட்சி தந்தார். பாடல்களில் மிக மிகச் சிறப்பானதும் இதுவரை ஒருவரும் கையா ளாததுமான ஒரு தனிப் 'பண்' (ஹரிகாம் போஜி). இதில் திருத்தாண்டகம் என்றொரு வகை பாடினார். ஆகவே தாண்டக வேந்தர் என அழைக்கப்பட்டார். இறைவனே இவரை நோக்கி, ''சுந்தரன் பொன்னைப் பாடினான், சம்பந்தன் தன்னைப் பாடினான், என் அப்பன் என்னைப் பாடினான்'' என்றதனால்தான் அப்பர் என்று இவர் பெயர் பெற்றார்.

மனிதனை எது அடிமையாக்குகிறதோ, அது அவன் தகுதியில் பாதியை அழித்துவிடு கிறது.

—போப்

குழந்தை தாயை நம்புவது போல, பத்தினி கணவனை நம்புவது போல, பார்த்த பொருளைக் கண் நம்புவது போல, தெய்வத்தை நம்புவது மனிதனின் கடமை. **—இராமானுஜர்**


பரிசுத்தம் எங்கே உதயமோ அங்கே பக்தி உதிக்கிறது. **—விலட்சணானந்தர்**

உண்மையான ஞானி யார்? ஐயோ, காலம் பறந்துகொண்டிருக்கிறதே என்று உணர்பவன்தான்.

—மகாகவி தாந்தே

வேதாந்தம் என்பது வெட்டிப் பேச்சல்ல; அதுதான் வாழ்க்கையின் தத்துவம்.

—தாம்சன்



உழைப்போம்; உயர்வோம்!

வே. தில்லைநாயகம்

தமிழ்நாடு பொது நூலக இயக்குநர்

உலகில் கோடானுகோடி மக்கள் பிறக்கின்றனர்; வளர்கின்றனர்; வாழ்கின்றனர்; மடிகின்றனர்; மறைகின்றனர்.

அவர்களில் பெரும்பாலோரைப் பற்றி உலகத்திற்கு — நமக்கு — ஒன்றுமே தெரிவதில்லை. ஏன்? அவரவர் குடும்பத்தாருக்குக் கூடக் கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவர்களைப் பற்றித் தெரிவதில்லை; தெரிந்து கொள்ள முடிவதில்லை.

ஆனால் அதற்கு மாறாகச் சிலர் மட்டும் என்றும் வாழ்பவர்களாக—நின்று வாழ்பவர்களாகத் திகழ்கிறார்கள். இது எப்படி?

தங்கள் அறிவால், அனுபவத்தால், ஆற்றலால், செயலால், செய்நேர்த்தியால், வாக்கால் வாழ்கிறார்கள். இதில் எத்தனையோ வகை!

வகை

வீரத்தால் உலகமெல்லாம் விளம்பரம் பெற்றவர் பலர். சேரன் செங்குட்டுவன், அலெக்சாண்டர், கஜினி முகமது, நெப்போலியன் போன்றவர்கள் இவர்களில் சிலர்.

சமயத்தால் உலகம் முழுவதும் சாகா வரம் பெற்று வாழ்பவர்கள் பலர். புத்தர், மகாவீரர், கிறிஸ்து, முகமது நபி, சங்கரர் முதலியோர் இவர்களில் சிலர்.

அரசியலால் ஆக்கம் பெற்றோர் பலர். சாணக்கியர், எட்டாம் ஹென்றி, சன்யாட்டு சென், வின்ஸ்டன் சர்ச்சில் இவர்களில் சிலர்.

தீரத்தால் பேர் பெற்றவர்கள் பலர். கொலம்பஸ், டென்சிங், நான்சன், லிவிங்ஸ்டன் போன்றோர் இவர்களில் சிலர்.

அறிவியல் முயற்சியால் அகிலப் புகழ் பெற்றவர்கள் பலர். ஆர்க்கிமிடிஸ், கூடன்பர்க், எடிசன், ரூதர்போர்டு, சி. வி. ராமன் போன்றோர் இவர்களில் சிலர்.

கலையால் நிலையான பெயர் பெற்றோர் பலர். மைக்கேல் அஞ்சலோ, இராபெல், பிகாசோ, தான்சன், இரவிவர்மா போன்றோர் இவர்களில் சிலர்.

வித்தியாசம்

இவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் காலத்தில், அவரவர் துறைகளில் வல்லுநராக வாழ்வு பெற்று உள்ளனர். ஐயத்திற்கு இடமே இல்லை.

ஆனால் சிலர் மட்டும் இந்த நிலைமையிலிருந்து மாறுபட்டுத் தம் அறிவால், ஒழுக்கத்தால், அவர்தம் வாக்கால், வழிகாட்டி நிற்கும் முறையால் சால்பு உடையோர் ஆகின்றனர். சான்றோராக வாழ்கின்றனர். எப்படி?

கடமையுணர்வு, பண்பு, நலன், அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, கொல்லாமை, பணிவு, இன்னா செய்தாருக்கும் இனியவை செய்தல், மலை குலைந்தாலும் ஒழுக்க நிலை குலையாமை முதலிய நற்குணங்களால் நல்லவர்கள் சான்றோர் ஆகின்றனர்.

அத்தகு சான்றோர் வாக்கு, காலமெல்லாம் கலங்கரை விளக்கம் போல ஒளி தந்துகொண்டிருக்கிறது.

திருக்குறள்

இத்தகு சான்றோர்களில் திருவள்ளுவர் ஒருவர். இன்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் அவர் என்பதை நாமறிவோம். நானிலம் அறியும். இவர் சிறப்புப் பெற்றது எப்படி?

திருக்குறள்-இனம் கடந்து, மொழி கடந்து, நிலம் கடந்து, காலம் கடந்து உலகின் பல்வேறு மொழிகளிலே, பல்வேறு நூல்களிலே பரவி உலகநூல் வரிசையிலே சிறப்பு இடம் பெற்றுத் திகழ்கிறது. பல காலமாக வந்த

கருத்துக்களை அலசி ஆராய்ந்து, இன்றைய சிந்தனையைச் சித்திரித்து, எதிர்கால வாழ்க்கையை இயலும் வாழ்க்கை நெறியாக வழி காட்டியாகத் திகழ்கிறது.

திருக்குறள் ஒவ்வொன்றும் சூத்திரம் போலச் சிக்கனமான சொற்களில் யாப்பு அமைதியோடு, ஓசை இனிமையுடன், சிந்தனை ஆற்றலைப் பெருக்கும் வகையில், பொருள் பொதிந்து, செறிவு மிகுந்து விளங்குகிறது.

காலம் காட்டி

சொல் இயல் அமைப்பில், எளிய சொல் தொடர் அமைப்பில், எச்சப் பாங்கில், வியங்கோள் விகுதிகளைக் கையாளும் முறையில், சங்ககாலச் சிந்தனைப்போக்கில் ஒரு காலக் கட்டத்தைத் திருப்புமுனை (Turning point) ஆகக் காட்டுகிறது.

சங்ககால இலக்கியம், காதலையும் போரையும் பற்றியுமே சிறப்பித்துக் கூறுகிறது. இந்த நிலைமையை மாற்றித் திருக்குறள் ஓர் அறக் கோட்பாடு விளக்க இலக்கியம் (Didactic literature) என்ற முறையில் ஒரு மாற்றத்தைக் காட்டுகிறது.

பெரும்பாலான நூல்கள் ஏதாவது ஒரு கருத்தை, ஒரு நிலையை, சமயத்தைச் சார்ந்து பேசும் நிலையிலே அமைந்துள்ளன. அதனாலேயே சிறப்புப் பெறுகின்றன.

இந்த நிலையை மாற்றி, 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற உலகப் பொதுமையை, ஆன்மநேயக் கோட்பாடு (Humanism) நிலையைப் பேசித் திருக்குறள் சிறப்புப் பெறுகிறது.

பெரும்பாலும் ஒவ்வொரு நூலும் ஏதாவது ஒரு கருத்தைப் பற்றித்தான் அழுத்தமாகச் சொல்லும். அதனாலேயே சிறப்புப் பெறும். இந்த நிலையிலிருந்து மாறுபட்டு, திருக்குறள் உலக அறிவு முழுமையையும் ஆராய்கிறது.

இதனால் திருக்குறள் ஓர் உயிர்ப்பு நூல் (Inspirative work) ஆகத் திகழ்கிறது. உலக நூலாகச் செல்வாக்குப் பெற்றுள்ளது. இது கூறும் செய்தி என்ன?

மனிதன்: உலகத்தினை அறிய முதலில் மனிதனைக் காண வேண்டும்.

பொருள்: அன்பான வாழ்க்கை அமைதியாக நடைபெற, பொருள் தேடும் முயற்சி தொடங்குகிறது. மனிதன் சமூகத்திற்கு வருகிறான். அரசனைக் காண்கிறான். குடிமகன் ஆகிறான். உழைக்கிறான். தழைக்கிறான். சில சமயம் பிழைகளும் செய்கிறான். உணர்கிறான். திருந்துகிறான். பொருள் பெருக்கி வாழ்கிறான்.

அறம்: பெற்ற பொருளை முறையோடு செலவழிக்க வேண்டும். அறவழியில் செலவழிக்க வேண்டும். அதற்கு ஆண்டவன் வருகிறார்.

எழுத்துக்கு அகரம் போல உலகத்திற்கு ஆண்டவன் அடிப்படையானவர்; அவரை நம்பி ஒழுக்கமாக இரு; உண்மையாக இரு; நன்றாக இரு; ஒன்றாக இரு; உழைப்பாளியாக இரு; உழைத்துக்கொண்டே இரு; ஒழுக்கமாக இரு; உயரலாம் என்கிறார்.

ஊழ்: இந்த நிலைமை மாறி, சில சமயம் காரண காரியம் விளக்கம் கூற முடியாமல் ஊழால் ஊறு நேரலாம் என்றும் எச்சரிக்கிறார். அதே சமயம் சோர்வு இல்லாமல் செயற்படு; வெற்றி காணலாம் என்பதை,

''ஊழையும் உப்பக்கம் காண்பர்
உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்'' (620)

என்று கூறுகிறார்.

ஓயாது உழைத்து உயர்க என்கிறார் வள்ளுவர். எனவே உழைப்போம்; உயர்வோம்!

உலகப் பரப்பிலே நீ அடைய விரும்பும் ஆனந்தம் உனக்கு உள்ளேயே இருந்துகொண்டிருக்கிறது. இதனை நன்கு உணர்ந்துகொள். நலம் பெறலாம். —சுவாமி ராமதீர்த்தர்

எவன் மீதாவது பழிச்சொற்களைச் சுமத்திக்கொண்டு திரிபவன், ஊரிலுள்ள அத்தனை பேருக்கும் மறைமுகமான பகையாளியாகிவிடுகிறான். —ஔவையார்

கடவுள் நம்பிக்கை

விவேகானந்ததாசன்

இந்துக்களாகிய நமக்கு அரிச்சந்திரனின் கதை நன்கு தெரியும். எவ்வளவோ துன்பங்கள் அடுக்கடுக்காகச் சூழ்ந்தபோதிலும் உண்மையிலிருந்து அரிச்சந்திரன் பிறழவே இல்லை.

இதைப் போல, எவ்வளவோ துன்பங்கள் வந்தபோதிலும் கடவுள் நம்பிக்கை குலையாமல் இருந்த ஒரு பக்தர் யோபு. அவரது வரலாறு கிறிஸ்தவரின் திருமறையாகிய பைபிளின் ஒரு பிரிவாகிய பழைய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கிறது.

ஆண்டவனின் திருவருள் ஸ்தூலமாகவோ சூட்சுமமாகவோ, இந்தப் பிறவியிலோ அடுத்து வரும் பிறவிகளிலோ நமக்குக் கிடைப்பது உறுதி. ஆனால் கடவுள் நம்பிக்கையை மட்டும் நாம் உறுதியாகக் கொண்டிருக்க வேண்டும். உண்மையான, ஆழ்ந்த, கடவுள் நம்பிக்கைக்கு ஆண்டவனின் பரிசு நிச்சயம் உண்டு.

துன்பங்கள் நேரலாம். ஆனால் துவண்டு போகக்கூடாது. எந்த நிலையிலும் கடவுள் நம்பிக்கையை இழக்காமல் இருந்தால், ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம் ஆண்டவனின் திருவருள் கிடைப்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

* * *


யோபு என்ற ஒரு பெரிய பணக்காரர் இருந்தார். பணக்காரராக இருந்தது மட்டும் இல்லாமல், கடவுளிடம் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட சிறந்த நல்ல பக்தராகவும் அவர் விளங்கினர்.

யோபுவுக்கு ஏழு மகன்களும் மூன்று மகள்களும் இருந்தார்கள். அவர்களுடன் யோபு இன்பமாக வாழ்ந்து வந்தார்.

அவருக்கு ஏழாயிரம் ஆடுகளும், மூவாயிரம் ஒட்டகங்களும், ஐந்நூறு கழுதைகளும் சொந்தமாக இருந்தன. இவை தவிர, ஆயிரக்கணக்கான பணியாட்களும் யோபுவுக்கு இருந்தார்கள்.

பெருஞ்செல்வம் இருந்தாலும், செல்வச் செருக்கு என்பது யோபுவுக்கு அறவே இல்லை. கடவுளை நம்பி, கடவுள் நினைவுடன் அவர் வாழ்ந்து வந்தார். துன்பத்தில் இருப்பவர்களுக்கு ஆறுதல் சொல்லியும், வறுமையில் வாடுபவர்களுக்குப் பொருள் உதவியும் பயனுடைய வாழ்க்கை வாழ்ந்தார் யோபு. சிறந்த பண்புகள் பெற்றிருந்த அவரை ஊரும் உலகமும் நெஞ்சாரப் புகழ்ந்து பாராட்டின.

ஒரு நாள் ஆண்டவனின் முன்னால் சாத்தான் வந்து நின்றான். அவனைப் பார்த்த சர்வேசுவரன், ''நீ இப்போது எங்கேயிருந்து வருகிறாய்?'' என்று விசாரித்தார். அதற்குப் பதிலாகச் சாத்தான், பூவுலகம் முழுவதும் சுற்றிவிட்டு வந்ததாகத் தெரிவித்தான்.



ஆண்டவன், ''சாத்தானே! என் பக்தன் யோபுவைப் பார்த்தாயா? உத்தமனும் என்னிடம் அளவில்லாத அன்பு கொண்டவனுமாகிய அவனைப் போன்ற ஒருவர் உலகிலேயே இல்லை'' என்று சொன்னார்.

இதைக் கேட்ட சாத்தான், ''பகவானே! யோபு உண்மையாகவே உங்களிடம் பக்தி கொண்டிருக்கிறானா? உண்மையாகவே அவன் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டா வாழ்கிறான்? நீங்கள் அவனைச் சுகபோகத்தில் வைத்திருக்கிறீர்கள். அவனுக்கு ஏராளமான சொத்து இருக்கிறது. அவன் ஈடுபடும் எல்லாக் காரியங்களுமே தங்கள் கிருபையால் நல்ல விதமாக முடிகின்றன. ஆதலால் அவன் உங்களிடம் பக்தி உள்ளவனாக நடந்துகொள்கிறான். அவனுக்கு நீங்கள் கொடுத்து வைத்திருக்கிற

செல்வத்தை இல்லாமல் செய்துவிட்டால், அவனுடைய பக்தி அனைத்தும் பறந்து போய் விடாதா? அந்த நிலையில் அவன் உங்களைத் தூற்றாமல் இருப்பானா?'' என்று கேட்டான்.

சாத்தான் சொன்னதைக் கேட்ட பகவான், ''யோபுவின் உடைமைகள் எல்லாம் உன் பொறுப்பிலேயே இருக்கின்றன. ஆனால், அவனை மட்டும் நீ தொடக்கூடாது'' என்று தெரிவித்தார்.

பகவான் சொல்லி முடித்த அதே சமயம் சாத்தான் அந்த இடத்திலிருந்து மறைந்தான். யோபுவிடம் தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தான்.

அப்போது யோபு தமது மூத்த மகனின் மாளிகையில் இருந்தார். பெரிய விருந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த நேரத்தில் சற்றும் எதிர்பாராத வகையில் வேலைக்காரன் ஒருவன் திடீரென்று வேகவேகமாக ஓடி வந்து யோபுவை வணங்கினான். ''ஐயா! தங்களுக்குச் சொந்தமான கழுதைகளையும் எருதுகளையும் சபேயர் என்னும் கொடியவர்கள் ஓட்டிக் கொண்டு சென்றுவிட்டார்கள். அதைத் தடுக்கப் போன தங்களுடைய வேலைக்காரர்கள் அனைவருமே படுகொலை செய்யப்பட்டார்கள். நான் ஒருவன் மட்டுமே தங்களுக்குத் தகவல் தெரிவிப்பதற்காகத் தப்பி ஓடி வந்தேன்'' என்று வருத்தத்துடன் சொன்னான்.

அவன் அப்படிச் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே வேறொரு பணியாள் ஓடி வந்தான். ''பிரபோ, வானத்திலிருந்து நெருப்பு மழை பொழிந்தது. அது உங்களுக்குச் சொந்தமான எல்லா ஆடுகளையும், ஆடுகளைப் பாதுகாத்து வந்த எல்லா வேலைக்காரர்களையும் சுட்டுப் பொசுக்கிச் சாம்பலாக்கிவிட்டது. நான் ஒருவன் மட்டுமே செய்தியைத் தெரிவிப்பதற்காகத் தப்பி ஓடி வந்தேன்'' என்று சொன்னான்.

அவன் அப்படிச் சொல்லி முடிப்பதற்குள், மூன்றாவதாக ஒரு வேலைக்காரன் ஓடோடி வந்து யோபுவை வணங்கினான். அவன், ''எசமானே! யதேயர் என்பவர்கள் உங்களுடைய பணியாட்கள் அனைவரையும் கொன்று குவித்துவிட்டு, உங்களுடைய எல்லா ஒட்டகங்களையும் ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள்'' என்று தெரிவித்தான்.

கொடியவனாகிய சாத்தான் அதோடு யோபுவை விட்டுவிடுபவனாக இல்லை. யோபுவுக்கு ஒரே ஆதரவாக இருந்தவர்களையும் தீர்த்துவிட முடிவு கட்டினான். அதன் விளைவாக. . . .

மூன்றாவதாக வந்த வேலைக்காரன் விஷயத்தைச் சொல்லி முடிப்பதற்குள், நான்காவதாக வேறு ஒரு பணியாள் ஓடிவந்து யோபுவை வணங்கி நின்றான். ''எசமானே! தங்களுடைய மாளிகையை ஒரு பெரிய சூறைக்காற்றுத் தாக்கியது. அதனால் மாளிகை இடிந்து தரைமட்டமாகிவிட்டது! மாளிகைக்கு உள்ளே இருந்த உங்களுடைய பிள்ளைகள் அனைவரும் மாண்டு போனார்கள்'' என்று தெரிவித்தான்.

இப்போது யோபு, தாம் தன்னந்தனியாக உலகிலே விடப்பட்டுவிட்டதை உணர்ந்தார். என்றாலும் அவருடைய ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையைத்தான் என்ன என்று சொல்வது! அடுக்கடுக்காக அவ்வளவு பெரிய துன்ப அலைகள் தம்மை வந்து தாக்கியபோதும், ஆண்டவனைப் பற்றி அவர் ஒரே ஒரு வார்த்தைகூடத் தவறாகப் பேசவில்லை. யோபுவுக்கு நேர்ந்த இத்தனை பேரிழப்புகளாலும் அவருடைய பக்திக்கு ஒரு விதக் குறைபாட்டையும் உண்டுபண்ண முடியவில்லை. அந்த உயர்ந்த பக்தர், 'நன்றே செய்வாய், பிழை செய்வாய், நானோ இதற்கு நாயகமே' என்ற மனநிலையில் எந்தவிதச் சலனத்திற்கும் ஆளாகாமல் இருந்தார். எப்போதும் போலவே அமைதியாக அவர், ''இவை எல்லாவற்றையும் கடவுளே கொடுத்தார். அவர் கொடுத்தவற்றை அவரே இப்போது எடுத்துக் கொண்டார். அவருடைய திருநாமம் துதிக்கப்படுவதாகுக, போற்றப்படுவதாகுக, புகழப்படுவதாகுக!'' என்று சொன்னார்.

மீண்டும் ஒரு முறை சாத்தான் ஆண்டவனின் முன்னால் வந்து நின்றான்.

கடவுள் சாத்தானிடம் சொன்னார்: ''யோபு உத்தம பக்தன். நீ அவனுக்கு முன் எச்சரிக்கை தராமலே ஆதரவற்ற நிலையை உண்டாக்கினாய். அப்படியிருந்தும் என்மீது உள்ள அன்பு அவனுக்குக் குறையவே இல்லை, பார்த்தாயா?''

அதைக் கேட்ட சாத்தான் சொன்னான்: ''இறைவா, ஒருவன் தன்னிடம் உள்ள எல்லாச் செல்வங்களையும் இழப்பதற்குத் தயாராக இருப்பான். இதை வைத்து யோபுவின் பக்தி மனப்பான்மையைப் பற்றி முடிவு செய்வதற்கு

இல்லை. அவனுடைய உடலுக்கு நீங்கள் ஏதாவது வியாதியைக் கொடுத்துப் பார்த்தால், உங்களை அவன் தூற்றுமலா இருப்பான்?'' என்று கேட்டான்.

''சாத்தானே! நீ என்ன வேண்டுமானாலும் செய்துகொள். ஆனால், யோபுவின் உயிரை மட்டும் தொடாமல் விட்டுவிடு'' என்று பகவான் தெரிவித்தார்.

சாத்தானும் அந்தக் கணமே அவருடைய முன்னிலையிலிருந்து மறைந்தான். சாத்தானின் எண்ணமெல்லாம் யோபுவை எப்படியாவது பக்திநெறியிலிருந்து பிறழச் செய்ய வேண்டும் என்பதிலேயே இருந்தது.



ஆகவே அவன், யோபுவின் உடல் முழுவதும் பருக்களைக் கொண்ட அழிப்புண்களை உண்டாக்கினான். உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரையிலும் நிறைந்திருந்த அந்தப் புண்களால் யோபு மிகவும் வேதனைப்பட்டார். பலவிதமான அலங்காரங்களால் இதுவரையிலும் அலங்கரிக்கப்பட்டு வந்த யோபுவின் உடல், இப்போது பார்க்கவே சகிக்க முடியாததாக ஆகிவிட்டது. யோபுவை நரகவேதனையில் ஆழ்த்தி உயிரையே பறிப்பதைப் போல, அழிப்புண்கள் வாட்டியெடுத்தன. அவர் சாம்பற்குவியலின் மேல் உட்கார்ந்துகொண்டு, ஓர் ஓட்டால் புண்ணிலிருந்து வடியும் நீரைக் கீறிக்கொண்டிருந்தார்.

அப்போது அவரை அந்த நிலையில் பார்க்கச் சகிக்காத அவருடைய மனைவி, ''ஆண்டவனைத் தூற்றி உயிரை விடுங்கள்'' என்று சொன்னாள். அதற்கு யோபு பற்றற்ற முறையில் எப்போதும் போலவே அமைதியாகப் பதில் சொன்னார்: ''கடவுள் நமக்கு இன்பங்களைத் தரும்போது அவற்றை மகிழ்ச்சியோடு இரண்டு கைகளால் ஏந்திக்கொள்கிறோம். அப்படியே அவர் துன்பங்களைத் தரும்போது ஏன் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளக் கூடாது?''

யோபுவுக்கு நேர்ந்த துன்பங்களைக் கேள்விப்பட்டு, அவருடைய நண்பர்களாகிய எலிப்பாஸ், பில்தாத், சோப்பார் ஆகிய மூவரும் அவரைப் பார்ப்பதற்கு வந்தார்கள். அங்கே அவர்கள் கண்டது என்ன? யோபுவையா?

ஆம்! யோபுவேதான் அவர். உருக்குலைந்து, அடையாளம் தெரியாமல் பரிதாபகரமான நிலையில் இருந்த அந்த உருவம் யோபுவேதான். துக்கம் அவர்களுடைய நெஞ்சை அடைத்தது. வார்த்தைகள் வரவில்லை. உள்ளத்தில் பாரம் அழுத்தப் பேச முடியாமல் அவர்கள் யோபுவின் பக்கத்தில் உட்கார்ந்தார்கள். அவருடனேயே ஒருவாரகாலம் இருந்து அழுது புலம்பினார்கள். ஆறுதல் சொல்ல வந்தவர்களுக்கே இப்போது ஆறுதல் தேவைப்பட்டது.

யோபுவுக்கு அழிப்புண்களால் ஏற்பட்ட வலி அதிகமாகிக்கொண்டே வந்தது. ஆனால் அந்த நிலையிலும் யோபுவின் கடவுள் நம்பிக்கை குலையவில்லை. வாழ்விலும் தாழ்விலும் அவரது பக்தி மனப்பான்மை ஒரே மாதிரியாகவே இருந்தது. யோபு, ''நான் ஏன் பிறந்தேன்? பிறக்காமலே இருந்திருந்தால் நன்றாக இருக்கும்'' என்று சொன்னார்.

அவரது நிலையைக் கண்டு இரங்கிய எலிப்பாஸ், ''கவலைப்படாதீர்கள். நம்பினோர் கெடுவதில்லை. நடப்பதெல்லாம் நன்மைக்கே. ஆண்டவன் உங்களைக் கைவிடமாட்டான்'' என்று பலவிதங்களில் ஆறுதல் சொன்னார்.

யோபுவின் உடல், புழுக்களாலும் அடையைப் போல் படிந்திருந்த புழுதியாலும் பார்ப்பதற்கே அருவருப்பாக இருந்தது. யோபு, 'நான் ஒரு பாவமும் செய்ததில்லை. அப்படி இருக்கும்போது இந்த நிலைக்கு ஆளானது எப்படி?' என்று நினைத்தார். பிறகு அவர் இறைவனைக் குறித்து, ''பெருமானே! இதைவிட மரணமே எனக்கு நன்மையைத் தரும். இனி மேலும் நான் உயிருடன் இருக்க விரும்பவில்லை. என்னை விட்டுவிடுங்கள்'' என்றார். ஆனால் அப்போதும் அவர் ஆண்டவனை நொந்துகொள்ளவில்லை. தமது உண்மையான ஒரே சொத்தாகிய கடவுள் நம்பிக்கையை இழக்கவுமில்லை.

அந்தச் சமயத்தில் அவருடைய மற்றொரு நண்பராகிய பில்தாத், ''கடவுள் நல்லவனை வெறுப்பதில்லை. கொடியவனுக்குக் கைகொடுத்துக் காப்பாற்றுவதில்லை'' என்று பல ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லி யோபுவைச் சமாதானப்படுத்தினர். யோபு இறைவனைக் குறித்து, ''பகவானே! நான் சிறிது இளைப்பாறும்படியாக, உங்களால் விளைவிக்கப்பட்ட இந்தத்

துன்பங்களை என்னை விட்டு ஓய்ந்திருக்கச் செய்யுங்கள்'' என்றார். அப்போது மற்றொரு நண்பரான நாமாத்தியர் யோபுவுக்கு ஆறுதல் சொன்னார்.

சாத்தான், யோபுவின் மூன்று நண்பர்களையும் தன்னுடைய 'கைங்கரிய'த்திற்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தான் போலும்! யோபுவுக்கு நேர்ந்த எல்லாத் துன்பங்களுக்கும், அவர் செய்த பாவங்கள்தாம் காரணம் என்று அவர்கள் நினைத்தார்கள். அதை வெளிப்படையாக யோபுவிடம் சொல்லி அவரைக் குற்றம் சாட்டுவதைப் போலப் பேசிக் கொண்டே இருந்தார்கள். பாவம் என்பதையே கனவிலும் அறியாத யோபுவின் வளமான வாழ்க்கையை அவர்கள் அறிந்துதான் இருந்தார்கள். அப்படியிருந்தும் அவர்களை அவ்விதம் நினைக்கவும் பேசவும் தூண்டியது சாத்தானின் செய்கை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆரம்பத்தில் ஆறுதல் சொல்ல வந்த அருமை நண்பர்கள், இவ்விதம் தம்மைப்பற்றித் தவறான முடிவுக்கு வந்து வசைமாரி பொழிந்ததைக் கேட்ட யோபு மேலும் மனம் வருந்தினார். அவர் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த கடந்த காலத்தை ஆராய்வதைப் போல நினைத்துப் பார்த்தார். அந்த நாளில் ஏராளமானவர்களுக்குப் பயன்படும் வகையில் சிறந்த வாழ்க்கை வாழ்ந்ததும், தாம் தெரிந்தே எந்த ஒரு தவறும் செய்யவில்லை என்பதும் அவருக்குப் புலப்பட்டன. ஆகவே அவர் மன அமைதி பெற்றார்.

யோபுவின் நண்பர்களும் ஆண்டவனின் பெருமைகளைப் பற்றி உதட்டளவில் பேச ஆரம்பித்தார்கள். அவர்களுடைய பேச்சு ஒரு பொழுதுபோக்கைப் போல வெறும் பேச்சாகத்தான் இருந்தது. காரணம், அவர்களுடைய கடவுள் நம்பிக்கை ஆழ்ந்ததாகவும் உண்மையானதாகவும் இல்லை.

ஆனால் யோபுவோ, செல்வச் செழிப்புடன் இருந்தபோது கொண்டிருந்த அதே ஆழ்ந்த கடவுள் நம்பிக்கையை இப்போதும் கொண்டிருந்தார். ஆகவே நண்பர்கள் யோபுவிடம் குற்றங்கள் இருப்பதைப் போலப் பேசியபோதும், அவர் இறைவனை நிந்தித்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

யோபு கடைசியாக, ''என் உயிர் பிரியும் வரையிலும், நல்லவனாக இருப்பதிலிருந்து நான் விலகமாட்டேன். நீதி என்று எனக்குத் தெரிந்ததை நான் உறுதியாகப் பற்றி நிற்பேன். கடவுளின் அருளால்தான் நான் சுகமாக வாழ்ந்திருந்தேன். அப்போது என்னை வந்தடைந்த அனைவருக்குமே நான் அன்பும் ஆதரவும் காட்டினேன். பரோபகாரமாக நடந்துகொண்டேன். கடந்து போன அந்த நாட்கள் மீண்டும் இப்



போது வருமானால் மிகவும் நன்றாக இருக்கும். இப்போதோ நான் சேற்றிலே தள்ளப்பட்டவனாக இருக்கிறேன்'' என்று சொன்னார்.

அவருடைய ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை வீணாகவே இல்லை. ஆண்டவன் அவரை இன்னமும் சாத்தானிடம் விட்டு வைக்கத் தயாராக இல்லை போலும். யோபு ஆண்டவனை நோக்கி முறையிட்டுக்கொண்ட சிறிது நேரத்திற்குள்ளாக, ஆண்டவனே அந்த உத்தம பக்தரின் முன்னால் தோன்றினார். யோபு, சர்வேசுவரனின் பரிபூரண ஆசியைப் பெற்றார்.

இறைவன் யோபுவின் நண்பர்களைப் பார்த்து, ''என் பக்தனாகிய யோபுவைப் போல நீங்கள் என்னைப் பற்றிப் பேசவில்லை'' என்று சொன்னார். நண்பர்கள் மூன்று பேரும், யோபுவின் பக்தியின் பெருமையைப் பகவானின் வாய்மொழியாகவே உணர்ந்து கொண்டார்கள். இறைவன், யோபு இழந்த செல்வங்கள் அனைத்தையும் மீண்டும் அவரைப் பெறச் செய்ததோடு, மேலும் பல மடங்கு செல்வங்களையும் அவர் பெறும்படி செய்தார். வறுமையும் நோயும் யோபுவை விட்டு அறவே ஒழிந்தன. முன்பு இருந்ததைப் போலவே ஏழு பிள்ளைகளையும் மூன்று பெண்களையும் அவர் பெற்றார்.

பிறகு யோபு தமது நான்கு தலைமுறையைச் சேர்ந்த பேரப்பிள்ளைகளின் காலம் வரையிலும், நூற்றுநாற்பது ஆண்டுகள் பலரும் பாராட்டச் சிறந்த வாழ்க்கை வாழ்ந்தார்.

மாயை


[ஸ்ரீராமபிரானின் அருளுரை]

உடலைத் தவருக ஆத்மா என்று கருதுவதே மாயை எனப்படும். சம்சார சிருஷ்டிக்குக் காரணமாக இருப்பது இந்த மாயையே ஆகும்.

ஃ ஃ ஃ

மாயை இரண்டு சக்திகளைக் கொண்டது. விக்ஷேபம் என்றும் ஆவரணம் என்றும் அவை சொல்லப்படும். விக்ஷேப சக்தியைக் கொண்டு மாயையானது உலகம் முழுவதையும் சிருஷ்டிக்கிறது. மகத் தத்துவம் முதற்கொண்டு பிரம்மா வரையிலும் உள்ள அனைத்தையும் அது படைக்கிறது. அதுபோலவே ஸ்தூலப் பொருள்களையும் சூட்சுமப் பொருள்களையும் உண்டு பண்ணுகிறது. ஆவரண சக்தியைக் கொண்டு மாயையானது ஆத்மஞானத்தை மூடி மறைத்துவிடுகிறது.

ஃ ஃ ஃ



பொய்யான கற்பனை காரணமாகவே கயிற்றைப் பாம்பு என்று தவருகக் காண்கிறோம். அதேபோல, மாயாசக்தியால் சுத்தமான பரமாத்மா, உலகம் என்று தவருகக் கொள்ளப் படுகிறது. நாம் ஆழ்ந்து சிந்தித்தால் உலகம் மறைந்துவிடும். பிரம்மம் ஒன்று மட்டுமே எஞ்சியிருக்கும்.

ஃ ஃ ஃ

எப்போதும் மனிதன் எதையெல்லாம் கேட்கிருனே, பார்க்கிருனே, நினைக்கிருனே அவை எல்லாம் மித்யை. கனவில் காணும் பொருள்களும் மனம் கற்பித்துக்கொள்கிற ஆகாயக் கோட்டைகளும் உண்மை ஆகிவிட மாட்டா அல்லவா? அதுபோலத்தான்.

ஃ ஃ ஃ

ஒரு பாம்பு ஒரு தவளையைப் பிடித்துவிட்டது. தவளை நன்ருகப் பாம்பின் வாயில் சிக்கிக் கொண்டுவிட்டது. தவளையின் ஒரு பாதி பாம்பின் வாய்க்குள் விழுங்கப்பட்டும் ஆயிற்று. அந்தச் சமயத்தில் தவளை, தனக்கு அருகில் வந்து சேர்ந்த சிறிய ஈக்களைப் பிடித்துத் தின்பதற்கு முயற்சி செய்கிறது! மனிதனும் இந்தத் தவளையைப் போலவேதான் இருக்கிருன். காலம் என்னும் பாம்பு அவனை ஏற்கனவே பிடித்துக் கொண்டாயிற்று. ஆனல் அவன் நிலையற்ற புலன் இன்பங்களைத் தேடுகிருன். தோன்றி மறையும் நிலையற்ற அந்த இன்பங்களை அடைவதற்கு அவன் இரவு பகலாகப் பாடுபட்டுக் கடுமையாக முயற்சி செய்கிருன்!

ஃ ஃ ஃ

என்னுடைய மாயையால் மோகிக்கப்பட்ட உள்ளங்களைக் கொண்ட பண்டிதர்கள், இந்த மனித உடல் எடுத்துள்ள என்னைப் புரிந்து கொள்வதில்லை. இன்ப துன்பங்களால் நான் பாதிக்கப்படுகிறேன் என்று அவர்கள் எண்ணியிருக்கிருர்கள்.

ஃ ஃ ஃ

உடல் முதலியவைகளே ஆத்மா என்னும் பொய்யான கருத்தே மாயை எனப்படும். இவ்விதம் ஆத்மாவை ஸ்தூல உடல் என்று நினைப்பதனுல்தான், இந்தச் சம்சாரமானது மனத்தால் சிருஷ்டிக்கப்படுகிறது.

ஃ ஃ ஃ

இந்த உலகத்திற்குச் சுயமாகத் தனிப்பட்ட இருப்பே கிடையாது. அது நமது கற்பனையில் தான் இருக்கிறது. இது, ஒரு கயிற்றில் பாம்பு இருப்பதாக நாம் கற்பித்துக்கொள்வதைப் போன்றது.

ஃ ஃ ஃ

'இதுவன்று, இதுவன்று' என்னும் நேதி முறையைப் பின்பற்றி நீ பரமாத்மாவை அறிந்துகொண்ட பிறகுதான் கர்மங்கள் எல்லாவற்றையும் நீ தவிர்த்து விடலாம். அது வரையிலும் நீ உன்னுடைய கடமைகளைச் செய்துகொண்டுதான் இருக்க வேண்டும். ஆத்மாவானது, உடல் புலன்கள் ஆகியவைகளிலிருந்து வேறுபட்டது என்ற உணர்வைப் பெறும் அந்தக் கணத்திலேயே, சம்சாரத்துக்குக் காரணமாக இருந்து வரும் மாயை அழிந்து போய்விடும்.

அற்புதத் திருவந்தாதி விளக்கம்:

பொன்னும் வெள்ளியும்

வாகீசகலாநிதி **கி. வா. ஜகந்நாதன்**

காரைக்காலம்மையார் இன்னும் கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார். மதி ஒன்று இல்லா அரவு இறைவன் திருமுடியில் உள்ள மதியையும் திருமார்பில் உள்ள பன்றிக் கொம்பையும் மாறி மாறிப் பார்ப்பதாகவும், அது இன்னும் இதுதான் சந்திரனென்று முடிவு கட்ட முடியாமல் இருக்கிறதாகவும் ஒரு கற்பனையைக் கூறினார். மறுபடியும் அவருடைய கற்பனை விரிகிறது. இப்போது அவர் இறைவனுடைய திருமுடியைப் பார்க்கிறார்.

திருமுடியில் உள்ள சடை செந்நிறம் உடையதாக இருக்கிறது. அவனுக்குச் செஞ்சடையப்



பன் என்பதே ஒரு பெயர் அல்லவா? அந்தச் சடைக்காட்டின் நடுவில் சந்திரன் இருக்கிறது. அதன் நிலாக்கதிர் சடையின் மேல் வீசுகிறது. ஒரே சிவப்பாக இருக்கும் சடாபாரத்தின் இடையிடையே நிலாக்கதிர்கள் தவழ்கின்றன. சடையின் பொன்னிறத் தோற்றத்தினிடையே நிலாவின் வெள்ளிக்கதிர் விராவியிருக்கிறது.

இந்த இரண்டும் விராவியிருக்கும் தோற்றத்தை அம்மையார் உற்றுக் கவனிக்கிறார். சடை புரிபுரியாக இருக்கிறது. புரிசடை என்றே சொல்வார்கள். அந்தப் புரிகளின் இடையே நிலாக்கதிர்கள் வெள்ளை வெளேரென்று தோற்றம் அளிக்கின்றன.

கற்பனை செய்யும் மனநிலையில் உள்ள அம்மையார் இந்த விராவும் தோற்றத்தைப் பற்றி எண்ணுகிறார். எந்த விதமாக இந்த விராவும் காட்சியைக் கற்பனை செய்வது? உவமையாக எதையாவது சொல்லலாமா? இறைவனுடைய செம்மையான கேசத்தினிடையே நரைத்த கேசம் இருக்கிறதா? செம்மயிரும் நரைமயிரும் கலந்த காட்சி என்று சொல்லலாமா!

சே! இறைவன் சாவா மூவாப் பேராளன். மனிதர்களுக்குத்தான் நரை, திரை, மூப்பு, இறப்பு எல்லாம் வரும். ஆதியும் அந்தமும் இல்லாத அவனுக்கு இந்தத் தளர்ச்சிகள் இல்லை. ஆகவே நரை அவனிடம் உண்டாக நியாயம் இல்லை. அதைச் சொன்னால் இறைவனை இகழ்வதாக அல்லவோ ஆகிவிடும்? பின் எதை உவமை சொல்லலாம்? இறைவன் திருமுடியில் உள்ள சடை செம்பொன்னைப் போலத் தோற்றுகிறது. ''ஞான்ற குழற் சடைகள் பொன்வரை போல் மின்னுவன'' (26) என்று அம்மையாரே முன்பு ஒரு பாட்டில் சொல்லியிருக்கிறார். ஆகவே சடையின் புரிகளைப் பொன் புரிகளாக உவமை செய்வது பொருத்தமாக இருக்கும். சடையின் இடையிடையே விரவியிருக்கும் நிலவுக்கதிர்களுக்கு எதை உவமை சொல்வது?

பொன்னோடு இணைந்த ஒன்றைச் சொன்னால் பொருத்தமாக இருக்கும். பொன்னும் வெள்ளியும் இனம் அல்லவா? ஆகவே இரண்டையும் உவமையாக்கலாம். சடை பொன்புரியானால் நிலாக்கதிர் வெள்ளிப்புரியாக இருக்கலாம். பொன்னும் வெள்ளியும் இணைந்த காட்சி என்று சொல்வதுதான் சரி என்று முடிவு கட்டினார்.

மறுபடியும் இறைவன் திருமுடியைப் பார்க்கிறார். சந்திரன் பிறையாக, அழகிய குழவித் திங்களாக இருக்கிறது. வளைந்து வில்லைப் போல இருக்கிறது. வெள்ளித் தகட்டை அராவி வளைத்து வைத்தால் எப்படி இருக்குமோ அப்படித் தோற்றம் அளிக்கிறது.

அராவி வளைத்தனைய அம்குழவித் திங்கள்.

அதனுடைய கதிர்கள் எங்கும் பரந்து சடை முழுவதும் விராவிக் கலந்திருக்கின்றன. நீள நீளமாக ஓடிச் சடைப்புரிகளின் இடையிடையே விராவியிருக்கின்றன.

விராவு கதிர்விரிய ஓடி—விராவுதலால்.

இறைவனுக்கு ஒப்பாக யாரையும் சொல்ல முடியாது. அவன் தனக்கு உவமை இல்லாத

வன். அப்படி ஏதாவது உவமையைச் சொல் லித்தான் ஆகவேண்டும் என்ருல், அவனுக்கு அவனே உவமை என்றுதான் சொல்ல வேண் டும். தன்னேடே தானே ஒப்பாக இருப்பவன் அவன். அவனுக்கு ஒப்பாக வேறு யாரையும் சொல்ல முடியாது என்பது உண்மைதான். ஆனுல் நம் கண்ணுக்குத் தெரிகிற அவன் சடைக்கும் நிலவுக்கதிருக்கும் உவமை சொல்ல லாமே!

சடை பொன்புரியைப் போல இருக்க,இடை யிடையே விராவும் நிலவுக்கதிர் வெள்ளிப்புரி யைப் போல இருக்கிறது. ''அவ்வாறு தோன்று கிறது அல்லவா?'' என்று அம்மையார் கேட் கிருர்.

பொன்னேடு வெள்ளிப் புரிபுரிந்தால்
போலாவே
தன்னேடே ஒப்பான் சடை?

''ஆம்'' என்று நாமும் தலையாட்டி அந்த உவமையை ஒப்புக்கொள்ளலாம் அல்லவா?

''அவனுடைய அங்கத்துக்கு உவமை கூற வருகிறீர்களே! அங்கியாகிய அவனுக்கு ஏதா வது உவமையைச் சொல்லக்கூடாதா?'' என்று யாராவது கேட்டுவிடப் போகிருர்களே என்று எண்ணினுர் போலும் ''அந்தப் பெருமானுக்கு ஒப்புக் கூற யாரால் முடியும்? அவனுக்கு அவனே ஒப்பு. ஏதோ கற்பனையில் அவன் சடைக்கும் நிலாக்கதிருக்கும் உவமை கூறலாம் என்று புகுந்தேன்'' என்பாரைப் போல,''தன்னேடே ஒப்பான்'' என்று சொல்கிருர்.

அராவி வளைத்தனைய அம்குழவித் திங்கள்
விராவு கதிர்விரிய ஓடி—விராவுதலால்
பொன்னேடு வெள்ளிப் புரிபுரிந்தால்
போலாவே,
தன்னேடே ஒப்பான் சடை?

[அரத்தால் வெள்ளித் தகட்டை அராவி வளைத்தாற் போன்ற தோற்றத்தையுடைய அழகிய இளம் பிறையிலிருந்து வெளியே தோன்றுகின்ற கதிர்கள் விரிவாக ஓடி இடை யிடையே விராவுதலால், தனக்குத் தானே ஒப்பாகிய இறைவனுடைய சடைகள், பொன் ஞலான புரிகளோடு வெள்ளிப்புரிகள் கலந்து அமைந்தாற் போலுள்ளன அல்லவா?

வளைத்தால் அனைய என்பது வளைத்தனைய என நின்றது;தொகுத்தல் விகாரம். இறைவன் திருமுடியில் ஒரு கலையையுடைய சந்திரனை வைத்திருக்கிருன்; அதனுல் குழவித் திங்கள் என்ருர். கதிர் - நிலாக் கிரணங்கள். புரிந்தால் -புரியாக அமைந்தால். போலவே-போல இருக்கின்றன அல்லவா; ஏகாரம், வினு. சடை -சடைகள்; பால்பகா அஃறிணைப் பெயர். சடை போலாவே என்று கூட்டுக.]

இறைவன் சடை பொன் போலவும், முடியி லுள்ள பிறையின் கதிர்கள் வெள்ளியைப் போலவும் தோன்றுகின்றன என்பது கருத்து.

இது **அற்புதத் திருவந்தாதியில்** வரும் 49-ஆம் பாடல்.

ஆகம விதங்கள் அறிவார்கள் அபரம் அறிவார்;
யோகமோடு உறங்கும் அவரே பரமுணர்ந்தார். **—சசிவர்ணபோதம்**

பிரார்த்தனை கடவுளை அடையும் பாதி வழிவரை நம்மைக் கொண்டு செல்கிறது; மத உணர்வு நம்மை அவனது மாளிகையின் வாயில்வரை அழைத்துச் செல்கிறது. ஆனுல் ஈகைதான் உள்ளே செல்லும் அனுமதியை அளிக்கிறது. **—குரான்**

கடைசிக் காலத்தில் நமக்கு மனச்சாந்தியைக் கொடுப்பவை, நாம் எவ்வளவு படித் தோம் என்பதல்ல; என்ன என்ன செய்தோம் என்பதே ஆகும். எவ்வளவு அழகாகப் பேசினேம் என்பது அல்ல; எவ்வளவு தூய்மையாக வாழ்ந்தோம் என்பதே. **—தாமஸ் அ கெம்பிஸ்**

உயர்ந்த பிராம்மண குலத்தில் உதித்தவராயினும் அகங்காரம், டம்பம், பிறருக்குத் துரோகம் செய்வது, பிறரைத் தூஷிப்பது, தம்மையே துதித்துக்கொள்வது, மற்றவர்களுடைய ரகசியங்களைப் பிறருக்குச் சொல்வது முதலிய கெட்ட குணங்களுடன் இருந்தால் நாய்மாமிசம் புசிப்பவர் போலத் தாழ்மை அடைகிருர். **—ஆசார்ய சுந்தர பாண்டியர்**



பொய் பேசலாமா?

பிரம்மசாரி நிரஞ்ஜன சைதன்யா

புத்தர், பௌத்தத் துறவிகளுக்காக ஒரு சங்கம்நிறுவினர். அந்தச் சங்கத்தில் புத்தரின் ஒரே மகனுகிய ராகுலனும் சேர்ந்து துறவறத்தை மேற்கொண்டான்.

ராகுலன் உண்மை பேசுவதிலிருந்து அவ்வப்போது வழுவினன். இதைப் புத்ததேவர் கவனித்தார். ஆகவே அவர் தனது மகனைத் திருத்தும் நோக்கத்தோடு, ''இளம் துறவியே! உன்னை நான் ஓரிடத்துக்கு அனுப்பப் போகிறேன். அங்கு சென்று நீ புலனடக்கமும் தவமும் பழகி வா'' என்று சொல்லி, வெகு தொலைவில் இருந்த ஒரு பௌத்த விகாரத்திற்கு ராகுலனை அனுப்பி வைத்தார்.

புத்தரின் கட்டளைப்படி அவர் குறிப்பிட்ட விகாரத்தில் ராகுலன் வாழ்ந்து வந்தான்.

சிறிது காலம் கடந்தது. புத்தர், ராகுலன் வாழ்ந்து வந்த விகாரத்திற்குச் சென்றார்.

புத்தரின் வருகை ராகுலனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தந்தது. ஆனந்தம் அவனுடைய உள்ளத்தில் ததும்பியது.

ஒரு நாள் புத்தர் ராகுலனைத் தன்பால் அழைத்தார். ''ராகுலா, இப்போது நீ என் பாதங்களை அலம்ப வேண்டும்'' என்று தெரிவித்தார்.

ராகுலன் தன் தந்தையின் திருவடிகளை ஒரு தட்டில் வைத்து முறைப்படி அலம்பினன். பிறகு புத்தர் அவனிடம், ''ராகுலா, நீ என் பாதங்களை அலம்பப் பயன்படுத்திய தண்ணீர் குடிப்பதற்கு ஏற்றதா?'' என்று வினவினர்.

''இல்லை. இந்தத் தண்ணீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்த முடியாது. இது இப்போது தூய்மையை இழந்துவிட்டது'' என்றான் ராகுலன்.

புத்தர் சொன்னர்: ''ராகுலா! இப்போது உன்னுடைய நிலையையே நீ சற்றுச் சிந்தித்துப் பார். நீ என்னுடைய மகன்; அதோடு வாழ்க்கைக்குரிய எல்லா வசதிகளையும் கொண்ட அரசர் குலத்தில் பிறந்தவன். அப்படிப்பட்ட நீ துறவறத்தை மேற்கொண்டாய். என்றாலும் பொய் பேசுவதை விலக்காமல் இருப்பதால், உன்னுடைய உள்ளத்தையே நீ களங்கப்படுத்திக் கொள்கிறாய்.''

பிறகு புத்தர், தட்டில் இருந்த நீரைக் கீழே கொட்டிவிட்டு, ''ராகுலா, இந்தத் தட்டில் இப்போது பருகும் நீரை வைக்கலாமா? அதற்குத் தட்டு ஏற்றதா?'' என்று கேட்டார்.

''இல்லை பெருமானே, தட்டில் இப்போது பருகும் நீரை வைப்பதற்கில்லை. அது அசுத்தம் அடைந்திருக்கிறது'' என்றான் ராகுலன்.

புத்தர் தொடர்ந்தார்: ''உன் நிலையையும் இப்போது நீ சிந்தித்துப் பார். இந்தத் தட்டு நல்லதுதான்; என்றாலும் இப்போது அது அசுத்தம் அடைந்திருக்கிறது. அதுபோலவே உயர்ந்த சன்னியாச வாழ்க்கையை மேற்கொண்டும், பொய் பேசுவதால் உன் மனம் களங்கம் அடைந்திருக்கிறது. இந்த நிலையில் உயர்ந்த நிலையைப் பெறும் தகுதியை நீ பெற முடியுமா?''

ராகுலனின் முன்னால் புத்தர் அந்தத் தட்டை எடுத்துப்பிடித்து வேகவேகமாகச் சுழற்றினர். பிறகு ராகுலனிடம், ''இளம் துறவியே! நான் தட்டை விரைவாகச் சுற்றியபோது தட்டு கீழே விழுந்து உடைந்து போய்விடுமே என்று நீ பயப்படவில்லையா?'' என்று கேட்டார்.

ராகுலன் சொன்னான்: ''இல்லை பெருமானே! நான் கொஞ்சமும் பயப்படவே இல்லை. காரணம், தட்டின் விலை மிகவும் அற்பமானது. உடைந்து போனாலும்கூட அதனால் பெரிய நஷ்டம் ஒன்றும் ஏற்படாது.''

புத்தர் தொடர்ந்து பேசினர்: ''ராகுலா! இப்போது உன் நிலையையும் பார். வினைப் பயன்களுக்கு உட்பட்டதால், பிறப்பதும் இறப்பதுமாக ஆயிரம் ஆயிரம் பிறவிகளில் நீ சுழற்றப்படுபவனாக இருந்து கொண்டிருக்கிறாய்! சுக்கல் சுக்கல்களாகப் போகும் உலகில் உள்ள

மற்றப் பொருள்களைப் போலவேதான் உனது உடலும் சிருஷ்டிக்கப்படுகிறது; பிறகு ஒன்றுக்குமே உதவாமல் புழுதியோடு புழுதியாகக் கலந்து மண் ஆகிறது. புழுதிமண் போலவே, உண்மையில் இருந்து பிறழ்பவன் சான்றோர்களால் அலட்சியமாகக் கருதப்படுகிறான்.''

இவ்விதம் மாதவச் செல்வராகிய புத்தர், மகனைத் திருத்தும் தாயைப் போலவும், தம்பியைத் திருத்தும் தமக்கையைப் போலவும், தவ வாழ்க்கைக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நிலையிலும் என்ன செய்கிறோம், என்ன பேசுகிறோம் என்பதை உணராமல் அறியாமையில் நினைத்திருந்த ராகுலனுக்குப் பல உதாரணங்களின் மூலம் அறிவுரை கூறினார்.

உலகில் தனது உள்ளத்திற்கு மிக நெருங்கிய ஒரே ஆன்மிகச் செல்வமாகவும், கண் முன்னால் வாழும் தெய்வமாகவும் விளங்கிய புத்தர் பிரானின் போதனைகள் ராகுலனின் உள்ளத்தில் மிக மிக ஆழமாகப் பாய்ந்தன.

புத்தர் எடுத்துக்காட்டிய உதாரணங்களால் தனது நிலையை உணர்ந்த ராகுலன், பெரிதும் வெட்கமும் வேதனையும் அடைந்தான். 'யாரிடம் பேசுகிறோம்? என்ன பேசுகிறோம்? எந்த நிலையில் இருந்து பேசுகிறோம்?' என்பதை இடையிடையே மறந்து போனதால் நேர்ந்த விளைவை எண்ணி எண்ணி ராகுலன் உருகினான். தனிமையில் அமர்ந்து கோவென்று கதறி அழ வேண்டும் போல அவனுக்கு இருந்தது. அதோடு, அது வரையிலும் ராகுலனுடன் இருந்து வந்த துடுக்குத்தனமாகப் பேசும் அவன் மனநிலைக்கும் ஒரு முடிவு ஏற்பட்டது. பண்படாத அவனுடைய பழைய மனநிலை அடியோடு சரிந்து விழுந்தது. தனது உள்ளத்தில் தெய்வத்தின் இடத்தைப் பெற்றுக் கோவில் கொண்டு விளங்கும் வழிபாட்டுக்குரிய புத்த தேவரின் திருவடிகளை மானசிகமாகக் கண்ணீரால் அலம்பித் தன்னை மன்னிக்கும்படி ராகுலன் பிரார்த்தித்தபடியே இருந்தான்.

அதே நேரத்தில், மகனின் உள்ளத்தில் நிகழும் போராட்டங்களுக்கு நல்ல ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில், புத்தர் யானையை மையமாகக் கொண்டு மேலும் ஓர் உதாரணம் கூறினார். ராகுலன் முழு அளவில் திருந்தப்பெற்றுச் சான்றோனாகத் திகழ வேண்டும் என்பது ஒன்றே புத்தரின் நோக்கமாக இருந்தது.

கருணையும் மன்னிக்கும் இயல்பும் வடிவெடுத்த புத்தர் சொன்னார்: ''ராகுலா, நான் சொல்வதை நன்றாகக் கவனி. நீண்ட காலத்திற்கு முன்பு ஓர் அரசனிடம் ஒரு பெரிய யானை இருந்தது. அந்த யானை வலிமை மிக்கது. சாதாரண ஐந்நூறு யானைகளுக்குள்ள வலிமையை அரசனிடம் இருந்த அந்த ஒரு யானையே பெற்றிருந்தது.

''போர்க்களத்திற்குச் செல்லும்போதெல்லாம் அந்த யானையின் தந்தங்களிலும், கால்களிலும் மற்றும் உடலின் பிற பாகங்களிலும் ஈட்டி, வாள் போன்ற போர்க்கருவிகளைப் பிணைத்து வைப்பது வழக்கம்; மேலும், அதனுடைய வாலிலும் இரும்புக் குண்டைக் கட்டியிருப்பார்கள். அந்த யானையிடம் போர்க்களத்தில் அகப்பட்டுக்கொண்டவர்கள் யாருமே தப்ப முடியாது.

''இவ்விதம் யானையின் அவயவங்கள் பாதுகாப்பாகவும் எதிரிகளின் படைகளை அழிப்பதாகவும் இருந்ததைக் கண்ட யானைப்பாகன் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தான். ஆனால், அந்த யானையின் துதிக்கையில் ஒரே ஒரு அம்பு பாய்ந்தாலும் ஆபத்து நேர்ந்துவிடும்; யானை நிலைகுலைந்து பாதகமான சூழ்நிலையை உருவாக்கிவிடும் என்பதை யானைப்பாகன் உணர்ந்திருந்தான். ஆதலால், அந்த யானை போர்க்களம் புகும்போது தனது துதிக்கையை நன்றாகச் சுற்றி வைத்துக்கொள்ளும்படி அதைப் பழக்கப்படுத்தி வைத்தான்.

''ஒரு நாள் வழக்கப்படி யானை போர்க்களம் புகுந்தது. எதிரிகளின் படைகளை அழித்துச் சின்னப்பின்னப் படுத்தியது. அப்போது வழக்கத்துக்கும் மாறாகத் தற்செயலாகக் கீழே ஒரு வாள் விழுந்துவிட்டது. உடனே அதை எடுக்க யானை தன் துதிக்கையை நீட்டியது! அதைப் பாகன் கண்டானோ இல்லையோ, மறு கணமே யானையை விரைவாகப் போர் நடைபெறும் இடத்திலிருந்து வெளியேறச் செய்தான்.

''பிறகு அரசனைப் பாகன் அரண்மனையில் தனிமையில் சந்தித்து, 'அரசர் பெருமானே, இன்றைய தினம் யானை போர்க்களத்தில் தனது துதிக்கையை நீட்டிவிட்டது! ஆகவே

இனியும் இந்த யானையைப் போருக்குப் பயன் படுத்துவது நல்லதல்ல' என்று தெரிவித்தான்.

''பிறகு அரசனும் பாகனும் கலந்து பேசினார்கள். அன்று முதல் அந்த யானையைப் போருக்குப் பயன்படுத்தாமல் விலக்கி வைத்தார்கள்.

''ராகுலா, மக்கள் தங்கள் நாவை அடக்கி வைக்கும் வரையிலும் நன்மை அடைவார்கள். யுத்தகளத்து யானை, தனது துதிக்கையில் அம்பு பாய்வதைத் தடுக்கத் துதிக்கையைப் பாதுகாப்பாக நன்றாகச் சுற்றி வைத்துக்கொள்வதைப் போலவே, நீயும் உன் நாவைப் பொய் பேசுவதிலிருந்து தவிர்க்க வேண்டும்; சத்தியத்தைக் கடைப்பிடிப்பதில் நின்று நிலைபெற்று வாழ வேண்டும்.

''உண்மையையே பேசுகிறோமா என்பதில் மிகுந்த கவனம் இருக்க வேண்டும். அவ்விதம் உண்மையில் ஆழ்ந்த கவனம் செலுத்தி உண்மையையே பேசுபவர்கள், சான்றோர்களாகவும் பாவங்களில் இருந்து விடுபட்டவர்களாகவும் ஆகிறார்கள். பழக்கத்தின் மூலம் நன்றாக அடக்கப்பட்ட யானையின் மீது, அரசன் தானே ஏறிப் போரில் ஈடுபடுகிறான். அந்த நிலையில் அரசனையே தன்மீது ஏற்றிச் செல்லும் புகழையும் அந்த யானை பெறுகிறது.

''அதுபோலவே தூய வாழ்க்கை வாழ்பவன் பெரியோர்களால் புகழவும் மதிக்கவும் படுகிறான். உலகில் தானும் சான்றோர்களில் ஒருவனாகத் திகழ்கிறான். தக்க சமயத்தில் அத்து மீறிச் செல்லும் யானை, தன் எஜமானின் திட்டத்தையே பாழ்படுத்துகிறது. அதுபோல இருப்பவன் இகழ்ச்சியை அடைகிறான்.''

இதுபோலப் பல உதாரணங்களையும் புத்த பகவான் ராகுலனுக்குச் சொன்னார். புலிக்குப் பிறந்தது பூனை ஆகாது அல்லவா? ஆகவே ராகுலனும் தனது நிலையை உணர்ந்தான். அன்று முதல் திருந்தியவனாக, தந்தைக்கு ஏற்ற மகனாகத் தூய வாழ்க்கை வாழ்ந்தான். அதன் காரணமாக நேர்மையான வாழ்க்கையால் பெறப்படும் நியாயமான புகழுக்கும் உரியவன் ஆனான்.

''ஒருவன் எப்போதும் சத்தியத்தையேபேசுபவனாக இருந்தால் அல்லாமல், சத்தியசொரூபியாகிய ஈசுவரனைக் காண முடியாது.''

—பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்



சந்தாதாரர்கள் கவனிக்க

சந்தா எண் 4001 முதல் 4225 வரையிலுமுள்ள அன்பர்களின் சந்தாத் தொகை மார்ச் மாதத்துடன் முடிவடைகிறது. மேற்கொண்டு பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்ப அடுத்த ஆண்டுச் சந்தா தொகை ரூ. 7-யை மார்ச் மாதம் 25-ஆம் தேதிக்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சந்தா எண் 5001 முதல் 5150 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை ஏப்ரல் மாதத்துடன் முடிவடைகிறது.

சந்தா எண் 7001 முதல் 7689 வரையிலும் உள்ள அன்பர்களின் சந்தாத் தொகை ஜூன் மாதத்துடன் முடிவடைகிறது.

அன்பர்கள் சந்தாவைக் கூடிய விரைவில் செலுத்திப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

பரமார்த்தப் பிரசங்கம்

சுவாமி விரஜானந்தர்

உயர்ந்த சிந்தனைகள், சத்சங்கம், நல்ல காரியங்கள் ஆகியவற்றின் மூலம் மனம் தூய்மையடைகிறது. அப்போதுதான் மனம் சஞ்சலம் நீங்கி ஜபத்திலும் தியானத்திலும் ஒருமுனைப்பட்டு நிற்கிறது. மாசு படிந்த கண்ணுடியில் பிரதிபிம்பம் தெளிவாக இருப்பதில்லை. அதே போல, மனம் அசுத்தமாக இருந்தால் தெய்விக உணர்வுகளை ஏற்பதற்கு அது தகுதியுடையதாக இருப்பதில்லை. ஆதலால் ஆத்மசாதனைகளும் பிரார்த்தனைகளும் மிகவும் அவசியமாகின்றன.

ஆரம்ப நிலையில் சாதனையையும் பிரார்த்தனையையும் பழகுவதற்கு நம்மை நாம் வலுக்கட்டாயப்படுத்தியே ஆகவேண்டும். அவற்றைப் பழகுவதற்கு மனம் ஈடுபாடு கொள்ளாமல் இருந்தாலும் இவ்விதம் கட்டாயப்படுத்தத்தான் வேண்டும். சாதனைகளைச் செய்துகொண்டே போகப்போக அவற்றில் ஒருவித ருசி ஏற்பட்டுப் பெருகுவதை நீ காண்பாய்; அவற்றில் உனக்கு விருப்பமும் ஏற்பட்டுவிடும்.

நோயாளி மருந்தை உட்கொள்ள விரும்பாவிட்டால், அதை உட்கொள்ளும்படி அவனைத் தூண்ட வேண்டும்; அல்லது அவனைக் கட்டாயப்படுத்தி மருந்தை உட்கொள்ளச் செய்ய வேண்டும். ஆனுல் உட்செலுத்திய மருந்தைத் துப்பிவிடும் நோயாளிகளும் இருக்கிருர்கள். அவர்களுடைய நோய் குணமாவது எப்படி?

ஃ ஃ ஃ

உன்னுடைய ஆத்மசாதனைகளையும் தவப் பயிற்சிகளையும் மேலும் மேலும் செய்துகொண்டு போகப்போக, பகவானின் திருவருள் உன்மீது பொழிவதை நீ மேலும் மேலும் உணர்ந்துகொள்வாய். அவருடைய 'சாந்நித்தியத்தையும் உன் இதயத்தில் மேலும் மேலும் உணர்வாய். இறைவன் உனக்கு எப்படிப் பல வழிகளிலும் உதவி வருகிருர் என்பதை நீ காண்பாய். உன்னைப் பின்னணியில் இருத்திக்கொண்டு அவரை நீ சாட்சாத்காரம் செய்வதற்கு எதுவெல்லாம் உனக்குத் தேவையோ, அதையெல்லாம் அவர் உனக்கு அளித்து வருவதைக் காண்பாய்.

மனத்தைக் கடவுள் ஆகர்ஷிக்கவில்லையென்றுல், மனம் எப்போதாவது அவரை நாடுமா என்ன? யார் ஒருவர் பேராவலோடு அவரை மட்டுமே விரும்புகிருரோ, அவருக்காக எல்லாவற்றையும் துறந்துவிடுகிருரோ, யாருடைய உயிர் அவரைச் சாட்சாத்கரிக்கத் துடிதுடிக்கிறதோ, வேறு எதிலுமே திருப்தி காணுமல் அவரையே வேண்டுகிறதோ, அப்படிப்பட்டவருடைய உள்ளத்தில் ஆழ்ந்த ஆன்மிகத் தூண்டுதலை இறைவனே புகுத்திவிடுகிருர். இவ்விதம் கடவுளுக்காக அருள்தாகம் கொண்டு பரிதவிக்கும் நிலை, பக்தியால் பித்தேறிய நிலை எனப்படும்.

தீவிர அருள்தாகத்தோடு கடவுளுக்காக ஏங்குவது என்பது, உண்மையில் கடவுளிடமே இருப்பதாகும். பகவானுடைய மாளிகையின் உட்புறக் கதவின் திறவுகோலாக விளங்குவது அருள்தாகமே ஆகும்.

ஃ ஃ ஃ

சிறிது காலம் ஜபமும் தியானமும் செய்துவிட்டு, ''இது என்ன? நான் இத்தனை நாட்களாக எவ்வளவோ ஆத்மசாதனைகளைச் செய்திருக்கிறேன்! என்றுலும் ஒன்றுமே பயன் ஏற்படவில்லையே!'' என்று நினைத்துக்கொள்ளாதே.

பல காலம் ஆத்மசாதனைகளைத் தொடர்ந்து பழகிய பிறகும், ஒரு பலனும் உனக்குக் கிடைக்கவில்லையானுல், உன்னிடம் எங்கோ ஏதோ ஒரு குறை இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள். உன்னிடம் ஏதோ ஒரு துவாரமோ வெடிப்போ இருந்து அதன் மூலமாக உன்னுடைய எல்லா வழிபாடுகளும், விரிசல் உள்ள ஜாடிநீர் ஒழுகிப் போவதைப் போல ஒழுகிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள். உனக்குள்ளேயே நன்றுகத் தேடிப் பார்த்து அந்த விரிசலைக் கண்டுபிடித்து அதை அடைத்து மூடிவிடு. அப்படிச் செய்தால்தான் உன் ஜாடியில் படிப்படியாக நீர் நிரம்பும். அந்த நிலையில் உனது உள்

ளத்தில் ஆன்மிக வலிமையும் ஆத்மானந்தமும் பரிபூரணமாக விளங்கும்.

'நான் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கிறேன்; எவ்வளவு ஆத்மசாதனைகளைச் செய்கிறேன்!' என்று நினைப்பது வெறும் மயக்கமே ஆகும். அது அகங்காரத்தின் சின்னமே ஆகும். அவ்விதம் நினைப்பதற்குப் பதிலாகப் பின்வருமாறு நினைத்துப் பிரார்த்திக்க வேண்டும்:

''நான் எவ்வளவுதான் தவ வாழ்க்கையில் முயற்சி செய்து உழைத்தாலும், இறைவா! தங்களைக் கண்டறிவதற்கு அது எவ்வளவு அற்பமான சாதனையாக விளங்குகிறது! உம்மை அறிவதற்கு உரிய எந்தத் தகுதியை நான் பெற்றிருக்கிறேன்? ஒன்றுமே இல்லையே! தாங்கள் கிருபையுடன் எனக்கு அருள் புரிவதால் மட்டுமே தங்களை நான் தரிசிக்க இயலும். இதைத் தவிர, இறைவா! எனக்கு வேறு வழி இல்லை. தங்களிடமே நான் சரண் புகுந்திருக்கிறேன். தங்களின் எல்லையற்ற கருணையால் என்மீது தயை கொள்வீராக! இறைவா, சம்சார பந்தங்களிலிருந்து என்னை விடுவித்துக் காத்தருள்வீராக!''



மேன்மைக்கு முன்பு பணிவும், அழிவுக்கு முன்பு இறுமாப்பும் வருகின்றன. —பைபிள்

கடவுளின் படைப்பான சூரியனையே உன்னால் நிமிர்ந்து பார்க்க முடியவில்லையானால், கடவுள் இல்லை என்று சொல்ல உனக்கு என்ன உறுதி இருக்கிறது? —ப. வே. நிக்

நேர்மையும் உண்மையும் ஒவ்வொரு நற்பண்புக்கும் அடிப்படையாகும்.
—கன்பூஷியஸ்

வாழ்வதற்காகப் பிறக்கிறோம். இது தெளிவானது. எதற்காகச் சாகிறோம்? இது புரியாதது. புரியாத புதிரை விடுவிக்கப் பிறக்கும் சிந்தனையே தத்துவம். —பொன்மொழி

அடுத்தவனது மனத்தில் மகிழ்ச்சியை வரவழைப்பதுதான் நல்ல செயல்.
—நபிகள்நாயகம்

தெய்வ வழிபாடு மிகவும் அவசியம். தெய்வ வழிபாடு இல்லாத சமுதாயத்தில் மனித வழிபாடு உண்டாகிவிடும். இந்த மனித வழிபாடு முற்றி முதிர்ந்து முடிவில் சமுதாயத்தையே சீரழிக்கும். எனவே தெய்வ வழிபாடு மிகமிக அவசியம். —ஓர் அறிஞர்

ஆமையைப் போல ஐம்புலன்களை அடக்கிய இடத்தில் ஒரு பெரிய சுகம் ஆரம்பமாகிறது. ஒரு மனிதன் வெளியிலே கண்டபடி அலைந்து திரியும்போது துன்பம் உண்டாகும். வீட்டிலே போய் நிழலில் சற்று ஆறுதலாக உட்கார்ந்தவுடன் மகிழ்ச்சியாக இருக்கிறதல்லவா? அதுபோல, புலன்கள் வெளிப்பட்டு உழலும்போது கவலை உண்டாகிறது. அவற்றை அகமுகப்படுத்தும் போது ஆறுதல் உண்டாகிறது. இதுவே மோட்சமாகிய பேரானந்தம். —கந்தபுராணம்

நமது தாய்நாடு

சுவாமி விவேகானந்தர்



1

இந்தியா அழிந்துவிடுமா? அது அப்படி அழிந்துவிடுமானுல் உலகிலிருந்து எல்லா ஞானமும் அழிந்து போய்விடும். நிறைந்த ஒழுக்கங்கள் எல்லாம் மறைந்தே போய்விடும். சமயத்தின்மீது நமக்குள்ள இதயபூர்வமான இனிய அனுதாப உணர்ச்சிகள் எல்லாம் அழிந்து போய்விடும். எல்லா உயர்ந்த இலட்சியங்களும் மறைந்து போய்விடும். அவை இருந்த இடத்திலே காமமும் ஆடம்பரமும் ஆண்தெய்வமாகவும் பெண்தெய்வமாகவும் குடிகொண்டு ஆட்சி செய்யும். பணமே அங்குப் பூசாரியாக உட்கார்ந்துகொள்ளும். வஞ்சகம், பலாத்காரம், போட்டி ஆகியவைகளையே அது தன்னுடைய பூஜைக்கிரியை முறைகளாக வைத்துக்கொள்ளும். மனித ஆன்மாவையே அது பலிபீடத்தில் பலியாக்கும். ஆனுல் அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி என்றுமே நடக்கப்போவதில்லை. . . . .

உயர்ந்த பண்பு, ஒழுக்கம், ஆன்மிகம் ஆகிய எல்லாச் சிறந்த பெருமைகளுக்கும் பிறப்பளித்தவள் நமது இந்தியத்தாய். முனிவர்கள் பலர் வாழ்ந்த நாடு இந்த நாடு. கடவுளுக்குச் சமமான மகான்கள் இன்னமும் இந்த நாட்டிலே தான் வாழ்ந்து வருகிறுர்கள். இத்தகைய இந்தியாவா அழிந்து போய்விடும்?

எனது அருமைச் சகோதரா! ஒரு பழமையான கைவிளக்கை எடுத்துக்கொண்டு, இந்தப் பரந்த உலகிலுள்ள நாடுநகரங்கள், பட்டிதொட்டிகள், காடுகழனிகள் எல்லாவற்றின் ஊடேயும் உன்னை நான் பின்தொடர்கிறேன். உன்னுல் முடியுமானுல், இப்படிப்பட்ட தலைசிறந்த மகான்களை வேறு எந்த நாட்டிலாவது தேடிக் காட்டு, பார்க்கலாம்.

2

நமது தாய்நாட்டிற்கு இந்த உலகம் பட்டிருக்கும் கடன் மகத்தானதாகும். நாட்டுக்கு நாடு எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால் பொறுமை உள்ள இந்துவுக்கு, சாதுவான இந்துவுக்கு உலகம் கடமைப்பட்டிருப்பதைப் போன்று, பூமியிலே வேறு எந்த இனத்துக்கும் உலகம் இவ்வளவு பெரிய அளவிலே கடன் பட்டிருக்கவில்லை என்பதை நீ பார்க்கலாம். . . . .

கிரீஸ் நாகரிகம் தோன்றுவதற்கு முன்பே, ரோம் நாகரிகம் பிறப்பதற்கு வெகு நீண்ட காலத்திற்கு முன்பே, தற்கால இந்த நவீன ஐரோப்பியர்களின் முன்னேர்கள் காட்டுமிராண்டிகளாகத் தங்களுடைய உடலிலே பச்சை குத்திக்கொண்டு காடுகளில் திரிந்து வாழ்ந்த அந்தக் காலத்திலேயே, நமது நாட்டில் மிக உயர்ந்த நாகரிகம் இருந்து வந்திருக்கிறது. ஏன், அதற்கும் முன்பேகூட வரலாற்றிலே குறிப்புக்களே கண்டுபிடிக்க முடியாத, சரித்திரமே புக முடியாத, இருண்ட அவ்வளவு மிகப் பழமையான காலத்திலிருந்து இன்று வரையிலும், பல உயர்ந்த கருத்துக்களும் சிந்தனைகளும் இந்த நாட்டிலிருந்துதான் அலையலையாக வெளியே சென்று பரவியிருக்கின்றன. ஆனுல் இவையெல்லாம் அன்புடனும் வாழ்த்துக்களுடனும் சமாதானத்துடனுமே சென்றிருக்கின்றன.

3

மற்ற ஆரிய நாடுகளின் முன்னேற்றத்தின் முன்பு, இந்தியாவின் முன்னேற்றம் ஒளி மங்கிக் காணப்படுவதற்கான காரணத்தை நீ சொல்ல முடியுமா? அவள் அறிவாற்றலில் குறைந்தவளா? அல்லது திறமையில்தான் குறைந்தவளா? அவளுடைய கலை, கணித அறிவு, தத்துவங்கள் ஆகிய இவைகளைப் பார். பிறகு அறிவாற்றலில் இந்திய அன்னை குறைந்தவள் என்று நீ சொல்ல முடியுமா? அவள் தன்னுடைய மயக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, தனது நீண்ட நெடுங்கால உறக்கத்திலிருந்து விழித்தெழ வேண்டும். இந்த ஒன்றுதான் உலக

நாடுகளின் முன்னணியில் தனக்கு உரிய உயர்ந்த இடத்தை அவள் திரும்பப் பெறுவதற்குத் தேவையாகும்........துறவும் தொண்டுமே இந்தியாவின் இலட்சியங்கள். இந்தப் பாதையிலே மேலும் மேலும் அவளை ஈடுபடுத்துங்கள். மற்றவை தானாக வந்து சேரும்.

4

அமரத்துவம் வாய்ந்த எனது அருமைக் குழந்தைகளே! நமது நாடு என்னும் இந்தக் கப்பல், பல்லாயிரக்கணக்கான நீண்ட நெடுங் காலமாகத் தனது நாகரிகத்தை ஏற்றிக் கொண்டு வந்திருக்கிறது. தனது எண்ணற்ற அரும்பெரும் செல்வங்களால் இந்த உலகம் முழுவதையும் மேலும் மேலும் வளமாக்கிக்கொண்டிருக்கிறது. பல ஆயிரக்கணக்கான நூற்றாண்டுகளாக நமது இந்தக் கப்பல், வாழ்க்கை என்னும் கடலைக் கடக்க நமக்கு உதவி புரிந்து



வந்திருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்களை வாழ்க்கைக் கடலின் துன்பமற்ற மறுகரைக்கு அழைத்துச் சென்றபடியே இருக்கிறது. ஆனால், இன்று அந்தக் கப்பலில் ஓர் ஓட்டை விழுந்து பழுதடைந்து போயிருக்கிறது. இந்த நிலைக்கு உங்களுடைய தவறுகளே காரணம். அல்லது வேறு காரணங்களும் இருக்கலாம். அதைக் குறித்து நாம் அவ்வளவாகப் பொருட்படுத்த வேண்டியதில்லை. நீங்கள் அதில் அமர்ந்து கொண்டிருக்கிறீர்கள். இப்போது நீங்கள் செய்யப் போகும் காரியம் என்ன? அந்தக் கப்பலைத் திட்டிக்கொண்டு, நீங்கள் ஒருவருடன் ஒருவர் சண்டை போட்டுக்கொண்டு இருக்கப் போகிறீர்களா? அல்லது நீங்கள் அனைவரும் ஒருவருடன் ஒருவர் ஒற்றுமையாக இணைந்து, அந்தக் கப்பலைப் பழுதுபார்க்க உங்கள் திறமைகள் அனைத்தையும் பயன்படுத்தப் போகிறீர்களா? நமது இதயத்தை மனமுவந்து அந்தப் பணிக்கு நாம் தருவோமாக. அல்லது அந்தப் பணியிலே தோல்வி அடைந்தால், மனதில் திட்டிக்கொண்டிருக்காமல் வாழ்த்திக்கொண்டே அனைவரும் ஒன்றாக மூழ்கி இறந்துவிடுவோமாக.

5

ஓர் அரக்கி தன்னுடைய உயிரை ஒரு சிறிய பறவையில் வைத்திருந்தாள். அந்தப் பறவை கொல்லப்பட்டாலன்றித் தன்னை ஒருவராலுமே கொல்ல முடியாது என்று சொல்லிக்கொண்டிருந்தாள். இந்த அரக்கியின் கதையை நாம் குழந்தைகளாக இருக்கும்போது கேட்டிருக்கிறோம். ஒரு நாட்டின் வாழ்க்கையும் அதைப் போன்றதே ஆகும்..........இப்போது நமது நாடாகிய இந்த அரக்கியின் உயிர் நாடி எங்கே இருக்கிறது என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். அது மதத்தில்தான் இருக்கிறது. இதை ஒருவராலுமே அழித்துவிட முடியவில்லை. எனவேதான் இந்திய நாடு எத்தனையெத்தனையோ துன்பங்களையும் சோதனைகளையும் கடந்து இன்னமும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது. 'ஒரு நாட்டினுடைய உயிர்நாடியைச் சமய வாழ்க்கையில் வைத்துக்கொண்டிருப்பதால் என்ன நன்மை ஏற்பட்டுவிடப் போகிறது? அதை மற்ற நாடுகளில் உள்ளதைப் போன்று, சமுதாயச் சுதந்திரத்திலோ அல்லது அரசியல் சுதந்திரத்திலோ வைத்தால் என்ன?'—என்று படித்த இந்தியர் ஒருவர் கேட்கிறார். இவ்வாறு பேசிக்கொண்டிருப்பது மிகவும் சுலபம்.......உண்மை இதுதான்: ஓர் ஆறு தன்னுடைய உற்பத்தி ஸ்தானமாகிய மலையிலிருந்து ஓராயிரம் மைல் தூரம் கீழே இறங்கி ஓடி வந்திருக்கிறது. அந்த ஆறு மீண்டும் தனது உற்பத்தி ஸ்தானத்துக்குத் திரும்பிப் போகுமா? அல்லது போகத்தான் முடியுமா? ஒருவேளை எப்போதாவது அந்த ஆறு அப்படித் திரும்பிப் போக முயற்சி செய்யுமானால், நாலாபுறங்களிலும் சிதறி, ஒன்றுமே இல்லாமல் வற்றிப் போய்விடும். எப்படி இருந்தாலும், அந்த ஆறு, பரந்த அழகிய சமவெளிகளில் பாய்ந்தோடியோ அல்லது கரடுமுரடான நிலத்தில் பாய்ந்து சென்றோ, விரைவிலோ அல்லது காலம்

தாழ்ந்தோ உறுதியாகக் கடலில் சென்று கலக்கத்தான் போகிறது. பதினாயிரம் ஆண்டுகளாக நமது நாட்டில் இருந்துவரும் நமது சமுதாயத்தின் வாழ்க்கை அமைப்பு முறையைத் தவறு என்று சொன்னால், அதைத் திருத்துவதற்கு வேறு வழியே கிடையாது. இப்போது அதற்கு ஒரு புதிய இயல்பை உருவாக்குவதற்கு முயற்சி செய்தால், அது அழிவில்தான் முடியும். இந்த முடிவு தவிர்க்க முடியாததாகிவிடும்.

6

நமது நாட்டின் உயிர் வாழ்க்கையை மேலோட்டமாகப் பார்த்தால் சாம்பல்பூத்து இறந்துவிட்டதைப் போலக் காணப்படுகிறது. ஆனால் அதனடியில் நெருப்பைப் போன்று அது இன்றும் கனன்று எரிந்துகொண்டிருக்கிறது. நமது நாட்டின் வாழ்க்கை மதத்தில்தான் அமைந்திருக்கிறது. அதன் மொழியும் மதம் தான்; மதமே அதனுடைய கருத்துக்கள்; அதனுடைய அரசியல், சமுதாயம், நகராட்சி மன்ற அமைப்புக்கள், பிளேக் தடுப்பு வேலைகள், பஞ்ச நிவாரணப் பணிகள்—ஆகிய இவை எல்லாமே மதத்தின் மூலமாகத்தான் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. இனிமேலும் அப்படியே நடத்தப்பட வேண்டும். அவ்விதம் இந்தப் பணிகள் நடத்தப்படாவிட்டால், எனது நண்பரே, உம்முடைய எல்லாக் கூச்சல்களும் புலம்பல்களும் ஒன்றுமே இல்லாமல் பயனற்றவையாக முடிந்து போகும்.

SRI RAMAKRISHNA VIJAYAM

Form IV

(See Rule 8)

Statement about ownership and other particulars about Sri Ramakrishna Vijayam (according to Form IV, Rule 8, circulated by the Registrar of Newspapers for India):

1. *Place of Publication* .. Madras–600004
2. *Periodicity of its Publication* .. Monthly
3. *Printer's Name* .. S. Ramaswamy
   Nationality Indian
   Address Rajsri Printers
   97 Avvai Shanmugam Road, Madras–600086
4. *Publisher's Name* .. Swami Chidghanananda
   Nationality Indian (Hindu Monk)
   Address Sri Ramakrishna Math
   Mylapore, Madras–600004
5. *Editor's Name* .. Swami Chidghanananda
   Nationality Indian (Hindu Monk)
   Address Sri Ramakrishna Math
   Mylapore, Madras–600004
6. *Name & address of individuals who own the newspaper and partners or shareholders holding more than 1% of the total capital* Sri Ramakrishna Math
   Mylapore
   Madras–600004

I, Swami Chidghanananda, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) **Swami Chidghanananda**
Signature of the Publisher

Date: 1-3-1978

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் பற்றி....

பத்திரிகைகளின் மதிப்புரை

சுவாமி விவேகானந்தர் நிறுவிய ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் தமிழக மக்களுக்குப் பலவிதங்களிலும் தொண்டாற்றி வருகிறது. அதன் ஓர் அம்சமாகத் திகழ்வது ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்.''

சாஸ்திரங்களின் உட்பொருள் விளக்கங்கள், ஆத்ம தத்துவம் குறித்த ஆராய்ச்சி, வேதாந்தம், சித்தாந்தம், சமய சமரசம், சுவையான தத்துவக் கதைகள், உபநிஷத உண்மைகள், சைவ வைணவக் கருத்துக்கள் ஆகிய இத்தனையும் விஜயத்தில் இடம் பெற்று 'இராமகிருஷ்ண மணம்' கமழ்கிறது. தற்கால மக்களுக்கு ஏற்ற எளிய நடையில் கட்டுரைகள் எழுதப் பெறுகின்றன.

—கல்கி
24-4-1977

தற்கால நவீன மனப்போக்குக்கு ஏற்ற வகையில், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும் காட்டிய வழியில் சிறந்த மனிதர்களை உருவாக்கும் இலட்சியத்துடன் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் தொண்டாற்றி வருகிறது. இந்து மதத்தைப் பற்றிக் குறிப்பாகவும், பொதுவாக ஏனைய பிற மதங்களையும் தழுவிய கருத்துக்களைத் தாங்கி, இன்றைய இளைஞர்களும் நாடிப் படிக்கும் வகையில் மதங்களைப் பற்றிய உண்மைகளை எடுத்து அளிக்கின்றது. மகான்களின் உன்னத வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகளும், நடைமுறை வாழ்க்கையில் மதத்தைப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளும் இடம் பெற்று மிக்க பயனுள்ள மலராக வெளிவருகிறது.

ஆண்டுதோறும் வெளிவரும் சிறப்பு மலர், சந்தாதாரர்களுக்குக் கூடுதல் விலையில்லாமல் கிடைக்கிறது. தவிர, மடத்தின் வெளியீடுகள் சந்தாதாரர்களுக்கு, 5 சதவீதம் கழிவு நீக்கிக் கிடைக்கும்.

—தினமணி
22-5-77

நல்லதொரு சஞ்சிகை: சுவாமி விவேகானந்தரை மனமுவந்து ஏற்ற முதல் மாநிலம் தமிழ்நாடு. தமிழ் மக்களின் விருந்தோம்பும் பண்பையும் பெரியோரை மதித்துப் போற்றும் சிறப்பையும் சுவாமிகள் நேரில் கண்டு உள்ளம் மகிழ்ந்தார். அதன் விளைவாக இங்கு நிறுவப்பட்ட ஸ்ரீராமகிருஷ்ண ஆசிரமம் இன்று சீரிய முறையில் நடைபெற்று வருகிறது. இந்த நிறுவனம் வெளியிடும் சிறந்த மாதப் பத்திரிகையான 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' அரிய கட்டுரைகளுடன் பக்த ஜனங்களுக்கு அமுதம் போன்று அமைந்திருப்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

இப்பத்திரிகை மெய்யன்பர்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்வு—வாக்கு மணிகளுடன் அரிய பேருண்மைகளை வெளியிட்டு உதவுகிறது.

—மஞ்சரி
செப்டம்பர் 1977

மயிலை ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலிருந்து கடந்த 57 ஆண்டுகளாக ஆன்மிக மாதப் பத்திரிகையின் தொண்டு நீடித்துவரினும், அதனுடைய வளர்ச்சிக்கு மக்களிடமிருந்து போதிய ஆதரவு கிடைக்கவில்லை என்று தெரியவருகிறது. அன்று முதல் இன்று வரை எம்மதத்தினருக்கும் உக்ந்தவண்ணம் பல ஆன்மிகப் போதனைகளைக் கொண்ட சிறந்த கட்டுரைகளைத் தாங்கி வருகிறது ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்''.

சமீப காலத்தில் அதன் நடையில் எளிமையான, சுவையானதொரு புதிய போக்குக் காணப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். ஒவ்வொரு கட்டுரையும் உள்ளத்தில் உறைந்து படிப்பவர்களிடையே ஆன்மிக வாழ்வின் அவசியத்தைப் பற்றிப் புத்துணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

வருடச் சந்தா ஏழே ரூபாய் கொண்ட இந்தப் பத்திரிகைக்குப் பெருமளவில் சந்தாதாரர்களாகிப் பத்திரிகையையும் தங்களையும் பயன்பெறச் செய்யும்படி வேண்டுகிறேன்.

—தினமணி
28-8-77

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தென்னாட்டுக் கிளையானது, தான் ஆற்றிவரும் வேதாந்தப் பணிக்குத் தமிழைச் சிறந்த முறையில் பயன்படுத்தி வருகிறது. வேதாந்தத் தத்துவத்தைத் தமிழிலேயும் திறம்பட விளக்க முடியும் என்பதனை நீண்ட காலமாகவே ஸ்ரீராமகிருஷ்ண மடம் நிரூபித்து வருகிறது.

இந்தப் பணிக்கென ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்'' என்னும் பெயரில் சிறந்த மாத இதழ் ஒன்றையும் சென்னை மயிலாப்பூரில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடம் வெளியிட்டு வருகிறது.

இந்தப் பத்திரிகையின் இதழ்களை மாதந்தோறும் ஒருவர் தொடர்ந்து படித்து வந்தாலே, அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு மெய்ஞ்ஞானியாக முடியும்.

பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம் பற்றிய விளக்கங்களெல்லாம் இனிய தமிழில் எளிய நடையில் ''ஸ்ரீராமகிருஷ்ண விஜய''த்தில் வெளிவருகின்றன.

ஸ்ரீராமகிருஷ்ணரின் அருள் வாக்குகள் இதழ்தோறும் வெளியிடப்படுகின்றன. வேதாந்தப் பத்திரிகையானாலும் திருமுருக கிருபானந்தவாரியார், வித்வான் கி. வா. ஜகந்நாதன் போன்ற சித்தாந்திகள் பலரின் கட்டுரைகளும் வெளிவருகின்றன.

கல்கத்தாவிலுள்ள தலைமை மடத்து வேதாந்திகளின் வாழ்க்கைக் குறிப்புக்களும், போதனைகளும், சாதனைகளும் அடிக்கடி ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்'' பத்திரிகையில் வெளிவருகின்றன.

தமிழ்நாட்டில் தோன்றி மறைந்த தாயுமானவர், வள்ளலார், சி. சுப்பிரமணிய பாரதியார் ஆகிய மெய்ஞ்ஞானியருடைய அருட்பாடல்களையும் அடிக்கடி படிக்க முடிகின்றது. இந்தச் சமரச ஞானியர்களின் கருத்துக்களையும், வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீ விவேகானந்தர் போன்ற அருளாளர்களின் வாழ்க்கைக் கருத்துக்களோடும் நிகழ்ச்சிகளோடும் ஒப்பிட்டுக் காட்டும் கட்டுரைகளைப் பலமுறை படித்து நான் பயன் அடைந்திருக்கிறேன்.

''வேதாந்தக் கலையைத் தமிழின் மூலம் விளக்க முடியுமா?'' என்று வினா எழுப்பப்பட்டது, முன்னொரு காலத்திலே! அதற்கு 'முடியும்' என்று செயல்மூலம் விடையளித்த பெருமை தமிழ்நாட்டிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடத்திற்கே உரிமையாகும். இதனை நினைவில் கொண்டால், ''ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்'' பத்திரிகை தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் தொண்டாற்றி வருவது புலனாகும்.

இந்தப் பத்திரிகையைத் தமிழ்மக்கள் ஆதரிக்க வேண்டும். குறிப்பாக, தெய்வபக்தர்களும் தேசபக்தர்களும் தவறாமல் வாங்க வேண்டும்.

—ம. பொ. சிவஞானம்
''செங்கோல்'' *30–10–77*

எழுத்தாளர்களுக்கு

நமது பத்திரிகைக்கு ஏற்புடைய கதை, கட்டுரை, தகவல்கள் முதலிய எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

மக்களுக்குப் பயன்படுவதாகவும், சுருக்கமாகவும், கருத்தாழம் கொண்டதாகவும், எழுத்தோவியங்கள் அமைவது முற்றிலும் அவசியம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும், வரிக்கு வரி நிறைய இடம் விட்டு எளிய தமிழ் நடையில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

பத்திரிகையில் வெளியிடப்படுவதாக இருந்தால், அனுப்பியவருக்கு ஒரு வார காலத்திற்குள்ளாக ஆசிரியர் சார்பாகப் பதில் கிடைத்துவிடும். அவ்விதம் பதில் பெறாத அன்பர்கள், போதிய தபால் தலைகளை அனுப்பிவைத்துத் தமது படைப்புக்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

ஆசிரியர்
ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் பற்றி......

சில கருத்துக்கள்

நமது 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' என்ற இனிய தமிழ் வெளியீடு கனியமுதம்போல் சித்தத்தில் தித்திக்கின்றது. சமானமில்லாத பரமஞானியின் திருப்பெயரால் வெளிவரும் இப் பத்திரிகையின் அரிய தெய்விகத் தொண்டை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம். சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் இந்த மாத வெளியீடு பரம பவித்திரமான கங்கா ஜலம் போன்ற தூய்மையானது. உள்ளத்தைத் தூய்மை செய்து இறையருளைத் தப்பாமல் நல்கும் இதனை, தமிழ் மக்கள் அனைவரும் ஒரு பெரும் வரப்பிரசாதமாக ஏற்றுப் படித்து, மிகுந்த பயனைப் பெறுவார்களாக.

அன்பன்

—கிருபானந்தவாரி

சில பத்திரிகைகளை படிக்கப் புகுவது பார்க்கில் நுழைவது போன்றது. இன்னும் சில பத்திரிகைகளில் நுழைவது உலாவச் செல்வதை ஒத்தது. வேறு சிலவற்றைப் பார்ப்பது கடை வீதிக்குப் போவதைப் போன்றது.

மிகச் சில பத்திரிகைகளையே கோவிலுக்குள் பயபக்தியோடு நுழைந்து வழிபடுவதைப் போன்ற சிரத்தையுடன் படிக்க முடியும். இப்படிச் சிரத்தையோடு படிக்க முடிந்த இதழ்களில் ஸ்ரீராமகிருஷ்ண விஜயமும் ஒன்று. ஸ்ரீராமகிருஷ்ண மடத்திலிருந்து பல்லாண்டுகளாக வெளி வரும் இந்த இதழ் வியாபாரத்துக்காக அந்தரங்க சுத்தியை இழந்து விடாமல் நடத்தப்படும் பத்திரிகைகளில் ஒன்று. ஆத்மசுத்தி—அந்தரங்க சுத்திக்கான விஷயங்களைக் கொண்டு இதுவெளி வருகிறது. மாற்றங்கள், ஏமாற்றங்கள், வர்த்தக தகிடுத்தங்களைச் செய்யாமல் வெளிவரும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தை எவ்வளவு பாராட்டினாலும் அதில் ஒரு சொல்லும் மிகையாக இராது என்று நான் துணிந்து கூறுவேன்.

—நா.பார்த்தசாரதி

*1977 டிசம்பர் இதழ் '**தீபம்**'*

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சஞ்சிகையை அவ்வப்போது பார்த்து வருகிறேன். ஒவ்வொரு இல்லத்திலும் இச்சஞ்சிகை விளங்கும் நாள் என்று வருமோ!

இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், அன்னை சாரதாமணி போன்றோரின் அருள்வாக்குகளினால் மட்டுமல்லாமல், அவர்களது அருள் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அறிவதனாலும் நமது மக்கள் பெரும் பயன் எய்துவர். இப்போது போலவே, தொடர்ந்து அத்தகு தெய்வத் தன்மை வாய்ந்த, நமது மண்ணில் வாழ்ந்திருந்த அப்பெருமக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அழகுபடக் கதைகளாக இந்த சஞ்சிகை வெளியிடுமானால் அற்புதமான நற்பயன்களை நமது மக்கள் பெறுவர். எல்லாவற்றுக்கும் காலமும் குருவின் அருளும் பாலிக்குமாக.

—ஜெயகாந்தன்

ஆண்டுச் சந்தா: இந்தியா—ரூ. 7.00 இலங்கை—ரூ. 18 யு.எஸ்.ஏ.—$ 3.00
பிறநாடுகள்—£ 1.70 ஆயுள் சந்தா: இந்தியா—ரூ. 100 யு.எஸ்.ஏ.—$ 50.00
பிறநாடுகள்—£ 20.00 தனிப்பிரதி வெளிநாடு: ரூ.—2

தனிப் பிரதி 70 காசு